# கார்காத்தார் ஒப்புரவு

# KARKATHAR OPPURAVU

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.


| மலர்–16, இதழ் – 6<br>Volume - 16, Issue - 6 | வைகாசி திங்கள்<br>May 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|





பார்வதி
மருத்துவமனை
முதுகுவலியால்
அவதிப்படுகிறீர்களா?
Watch Out for These Red Flags:
• தொடர்ச்சியான முதுகு வலி அல்லது கால்களுக்கு பரவும் வலி.
• 10 நிமிடங்களுக்கு மேல் நிற்பதில் சிரமம்.
• உங்கள் கால்களில் பலவீனமாக உணர்தல்.
இந்த அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், புறக்கணிக்காதீர்கள்.
இன்றே எங்கள் முதுகெலும்பு சிகிச்சை நிபுணர்களை அணுகவும்.
+91 90947 73303
044 2238 2248
www.parvathyhospital.com



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)



ஆசைக்கு
DOSAI
Mushroom Dosai - 150
Paneer Dosai - 150
Gobi Dosa - 150
Set Dosai Vada Curry - 150
Mappilai Samba Dosai - 150
Millet Dosai - 150
Mysore Masala Dosai - 150
Podi Onion Rava Dosai - 150
Modakkathan Dosai - 100
Butter Jam Uthappam - 100
Surraikai Adai - 120
hotel saradharam
chidambaram
FOOD FESTIVAL
Geethanjali
A/C VEGETARIAN RESTAURANT
Nattiya
A/C COCKTAIL LOUNGE
Darbar
A/C CONFERENCE HALL
Anupallavi
MULTI CUISINE RESTAURANT



PROSPERA
BY DAC
Introducing
India's First-Ever
Women-Centric Residences
LAUNCHING ON
25th to 27th April 2025
CLOSE TO METRO STATION
LUXURY 2&3 BHK APARTMENTS @ ₹79* LAKHS ONWARDS
women friendly homes
Member CREDAI
NEXT TO PORUR RAMACHANDRA
AERIAL VIEW
50+ AMENITIES
1ST TIME IN INDIA
SHE CORNER
WOMEN GYM & YOGA
WORK STATION
CONTEMPORARY ELEGANT FACADE
CRECHE
AIR CONDITIONED GYM
INDOOR GAMES
MINI THEATRE
TN/1/Building/0125/2025 dated 09.04.2025 | www.rera.tn.gov.in | *T&C Apply
DAC™
DREAM ASCEND CONQUER
93003 93003
www.dacdevelopers.com
100+ PROJECTS
3M+ SQFT CONSTRUCTION
2800+ HAPPY FAMILIES

# வாழ்த்துக்கள்




**திரு. B. கோவிந்தராஜன்** அவர்கள் (S/o. பாலகிருஷ்ணன் பிள்ளை – சந்திரா)
உழைப்பால் உயர்ந்து **Managing Director** – ஆக
**Royal Enfield - Eicher Motors Ltd.**–இல் பதவி ஏற்றுக்கொண்டு
நம் கார்குல இனத்திற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளார்
அவர் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.




# FLAT FOR SALE

# TAMBARAM WEST

**MULLAI NAGAR 1st Street**

**Close to Rly Station**

**Possession - May 2025**

- CALM & PRIME LOCATION
- STILT + 3 FLOORS – ONLY 3 FLATS
- 1400 SQ.FT. – 3 BHK
- CCP, MODULAR KITCHEN, CCTV
- QUALITY GROUND WATER,
- DRAINAGE CONNECTION

## *Upcoming Projects*

**RAM NAGAR**
**Madipakkam** | **2BHK-86 L**

**PADMANABHA NAGAR**
**ADYAR** | **2 BHK - 980 sqft**
**3 BHK-1840 sqft**

*We undertake*
**CONSTRUCTION ON TURN KEY**
*basis right from approval.*
*For profitable* **JOINT VENTURE**
*Land owners are invited.*

# MALAR FOUNDATIONS

**94440 70108 / 70109 41135 / 97870 61547**

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சமூக நலம் சார்ந்த பணிகளை “SPIRITUAL STAY” நிறுவனத்துடன் இணைந்து இவ்வருடம் சித்திரை மாதம் முதல் தொடங்க உள்ளோம். உங்கள் ஆதரவுடன் முதல் பணியாக திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகளை உரிய கட்டணத்துடன் செய்து தர உள்ளோம். அடுத்த முயற்சியாக மூத்த குடிமக்கள் சேவை மையம் தொடங்க உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

தொடர்பு 1 : **T.S. ஜோதிபிரகாசம்**
மேலாளர்
78454 15283

தொடர்பு 2 : **G. வாகீசன்**
ஸ்ரீ ஆடல்வல்லான் உணவு தயாரிப்பாளர்
94439 25170

**இதழின் உள்ளே....**



சங்க நிகழ்வுகள் ........................................ 11–20

தவணை முறை விற்பனை ........................................ 21

சங்கப் பலகை ........................................ 37

மணமகன் / மணமகள் தேவை ........................ 44 – 47

சிறுவர் பகுதி ........................................ 48 – 51

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



**கார்காத்தார் ஒப்புரவின் ஒப்பற்ற வாசகர்களுக்கு எங்களது வணக்கங்களும், வாழ்த்துக்களும்!**

அட்சயதிரிதியை நன்னாளில் காஞ்சி சங்கர மடத்தின் 71ஆவது மடாதிபதியாகும் பொருட்டு, இளைய மடாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆந்திர மாநிலம் துனி நகரில் பிறந்த சத்ய வெங்கட் சூரிய சுப்ரமணிய கணேச சர்மா திராவிட்டிற்கு, காஞ்சி மடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சுவாமிகள், காஞ்சி காமாட்சியம்மன் கோவில் தெப்பக்குளத்தில், பஞ்ச வாத்தியங்கள் முழங்க, வேத மந்திரங்கள் ஓதி, அவருக்கு தண்டம், கமண்டலம் வழங்கி, ஸ்படிகம், ருத்ராட்ச மாலை அணிவித்து மந்திர உபதேசம் அளித்து, சந்நியாச ஆசிரம தீட்சை வழங்கி, ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் என தீட்சை நாமம் சூட்டினார். வெகு விமரிசையாக நடந்த இவ்விழாவினில் தமிழக கவர்னர் ரவி, மடாதிபதிகள், ஆதினங்கள், வேதபண்டிதர்கள், பக்தர்கள் என பலரும் பங்கேற்றனர்.

2013ல் ரோமன் கத்தோலிக்கர்களின் திருத்தந்தையாகதேர்ந்தெடுக்கப்பட்டபோப்பாண்டவர் ஃபிரான்ஸிஸ், 1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி லத்தீன் அமெரிக்கா அர்ஜென்டீனாவில் பிறந்தவர். அவர் வாட்டிகன் சிட்டியின் தலைவராக மார்ச் 13, 2013–லிருந்து 21 ஏப்ரல் 2025 வரை பதவி வகித்துள்ளார். அவரின் மறைவு ரோமன் கத்தோலிகர்களுக்கு ஒரு மாபெரும் இழப்பு. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு ஐரோப்பா கண்டத்தை விடுத்து, மற்றொரு கண்டத்திலிருந்து தலைமைப் பொறுப்பேற்றவர். இவர் மக்களின் ஆண்டவராக, மிக எளிமையாக வாழ்ந்தவர். கோவாவின் சிஸ்டர் லூயி பிரிட்டோ என்பவர் 16 வருடங்கள் வாட்டிகனில் 3 போப்பாண்டவர்களின் கீழ் சேவை செய்து ஓய்வு பெற்றவர். அவர், போப் மிகவும் எளிமையான, ஆழ்ந்த அறிவுப்பூர்வமான எண்ணங்கள் உடையவரென்றும், குழந்தைகளிடம் மிகவும் பாசமிக்கவர் என்றும் கூறிஉள்ளார். இவர் சீனாவிடமும், இஸ்லாமிய நாடுகளிடமும் தொடர்பை வலுப்படுத்த முயன்றார். அவரின் மறைவு உலக நன்மைக்கு ஓர் இழப்பே!

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகல்காமில் நடந்த கொடுந்துயரம் இந்திய மக்களின் உள்ளங்களை உலுக்கி விட்டதெனில் அது மிகையன்று. சிறிது, சிறிதாக அமைதி திரும்பிய இந்தியாவின் சுவிட்சர்லாந்தில் சந்தோஷமாக விடுமுறையைக் கழிக்க வந்திருந்த சுற்றுலாப் பயணிகள், அவர்களது மதத்தினைக் கேட்டு கொன்று குவித்த தீவிரவாதிகளை என்னவென்று சொல்வது? அஸ்ஸாமிலிருந்துவந்திருந்தஒருகல்லூரிபேராசிரியர் குரானின் முதல் கல்மாவை ஒப்பித்ததால், பிழைத்துக் கொண்டதாக கூறி இருந்தார். தேன்நிலவுக்கு வந்திருந்த இரண்டு தம்பதிகளில், ஆண்மகன்களைக் குறிவைத்து சுட்டுக் கொன்ற அரக்கர்களுக்கு, நமது இந்திய அரசு தக்க நேரத்தில் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்; கொடுக்கும் என நம்புவோம்.

+2 தேர்வு முடிவுகள் வெளிவந்திருக்கும்; நம் குல மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றிருப்பார்கள் என நம்புகிறோம். தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் கார்காத்தார் ஒப்புரவின் வாழ்த்துக்களும்! ஆசிகளும்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. **8248449204** **க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

***- கார்காத்தார் ஒப்புரவு***

## சங்க நிகழ்வுகள்

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர் :

20–4–25 அன்று சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் தலைமையில் அவரது வரவேற்பு மற்றும் மலர்ச்சி இறைவணக்கப்பாடலுடன் துவங்கியது.

கார்காத்தார் ஒப்புரவின் படைப்பாளியும், சங்க உறுப்பினர் திரு. K. நாவு (Naavu) வேளச்சேரி அவர்களது தந்தையும் ஆகிய சைவ சிந்தாந்த சிரோன்மணி திருமிகு. சிதம்பரம், செம்மங்குடி கபீர்தாஸ் அவர்களது மறைவுக்கும், தமிழ் கூறும் நல்லுலகில் தமிழுக்காகவே வாழ்ந்து மறைந்து தமிழுடன் கலந்த குமரி அனந்தனுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

செயலாளர் திரு. G. தியாகராஜன் அவர்கள் சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையும் தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளையும் விவரித்து பதிவு செய்தார்கள். சங்க பொருளாளர் திரு. V. செல்வக்குமார் நிதிநிலை விவரத்தினை சமர்ப்பித்தார்கள்.

“மே” முதல் வாரம் முதல் நீர்மோர் வழங்க தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகள் விரிவாக விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டது. இறுதியில் செயற்குழு உறுப்பினர் திரு. V. கிருஷ்ணகுமார் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு திரு. G. செந்தில்நாதன் மற்றும் திருமதி. பானுமதி அவர்களால் இரவு உணவு வழங்கப்பட்டது.

நன்றி!

– க. சரவணன்.

### அண்ணாநகர் :

சங்க கூட்டம் நான் ஒரு ஐஏஎஸ் அகாடமியில் 20–4–2025 அன்று நடைபெற்றது. திரு. கோபாலகிருஷ்ணன் தலைவர் அவர்கள் திரு. சி.எஸ். நாராயணசாமி ஆடிட்டர் அவர்களின் சகலை திரு. ஆர். இராதாகிருஷ்ணன், திட்டக்குடி வெள்ளாழர் மன்ற செயலாளர் அவர்களின் மறைவிற்கு இரண்டு நிமிடம் அன்னாருக்காக மௌன அஞ்சலி சங்கத்தின் சார்பில் செலுத்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

ஆண்டு விழாவை எப்போதும் போல் அக்டோபர்–2 விஜயதசமி வருவதால் நடத்த முடியாது என்பதால் அக்டோபர் ஐந்து ஞாயிறு அன்று நடத்தலாமா என ஆலோசிக்கப்பட்டது மற்றும் ஆண்டு விழாவை இந்த முறை பகலில் வைத்து நடத்தலாமா எனவும் மற்ற சங்கங்களில் இருந்து வரும் பொறுப்பாளர்களை பேச வைக்க நேரம் கிடைக்கும் எனவும் பேசப்பட்டது, மற்றும் இந்த வருடம் ஆண்டு விழா மலர் வெளியிட வேண்டும் எனவும் பேசப்பட்டது.

ஜாதி சங்கங்களுக்கு ஜாதி பெயர் இருக்கக்கூடாது என நிலை வந்தால் எப்படி பெயர் மாற்றலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டது அடுத்து சென்னையில் இருப்பவர்கள் எல்லோரும் கட்டாயம், கார்காத்தார் ஒப்புரவு சந்தாதாரராக வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. நிறைவாக திரு. பாலபிரகாஷ் அவர்கள் நன்றி உரை சொல்ல கூட்டம் இனிதே நிறைவு பெற்றது நன்றி.

என். ஆனந்தகணபதி,

செயலாளர்.

செல் : 9094682811

## கடலூர்

சங்க கூட்டம், சங்கக் கட்டிடத்தில் 06.4.2025 அன்று நடைபெற்றது. சங்கத் தலைவர் தலைமையேற்றார். சங்கத்துணைத் தலைவர் அனைவரையும் வரவேற்றார். சங்கத்தின் துணைச் செயலாளர் K. சிதம்பரம் சேமிப்புத் திட்டங்களின் ஏப்ரல் 2025க்கு உரிய பயனாளிகளைத் தேர்வு செய்து அறிவித்தார்.

முன்னர் நடைபெற்ற செயற்குழுவில் தீர்மானித்தபடி சங்க உறுப்பினர்களின் முகவரியை சேகரித்து புத்தகமாக அச்சிட்டு வழங்கிட தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. சங்க உறுப்பினர்களில் பலர் சென்னை, பெங்களூரு, மும்பை போன்ற பெரு நகரங்களில்வசிக்கும்தங்கள்பிள்ளைகளின்வீடுகட்கு சென்றுவிட்டனர். அவர்களின் கடலூரில் உள்ள வீடுகள் பூட்டியே உள்ளன. மேற்படி உறுப்பினர்கள் சங்க பொறுப்பாளர்களை தங்களின் கைப்பேசி மூலம் இயன்ற விரைவில் தொடர்புகொண்டு விபரங்களைத் தெரியப்படுத்தினால் முகவரி புத்தகத்தில் தங்களது முகவரிகள் விடுபடாமல் இடம்பெற முடியும் என்பதை கனிவுடனும், அன்புடனும் தெரிவிக்கலாகிறது.

ஆடவர் சேமிப்புத் திட்டம் மே 2025ல் முடிவடைகிறது. மகளிர் சேமிப்புத் திட்டங்கள் ஜூன் 2025 முடிவடைகிறது. மேற்படி திட்டங்களில் சேர்ந்து பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளலாகிறது. அனைவருக்கும் இனிய தமிழ், தெலுங்கு புத்தாண்டு, அட்சயதிருதியை நல்வாழ்த்துக்கள்.

திரு. S. சுரேஷ் செயற்குழு உறுப்பினரின் நன்றி உரையுடன் மாதாந்திரக் கூட்டம் நிறைவடைந்தது.

- T. விவேகானந்தன்,

தலைவர்

## விருத்தாசலம் :

18–04–2025 அன்று சங்க கூட்டம் கடைவீதி பன்னீர்செல்வம் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த் தாய் வாழ்த்துக்களுடன் மற்றும் நமது பகுதி சமூகத்தில் இயற்கை எய்திய மூத்தவர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த மாதம் கூட்டத்தில் பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கிய மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்குவது சம்பந்தமாக கருத்து கேட்கப்பட்டது. அடுத்ததாக மகளிர் குழுவுக்கு உறுப்பினர்களிடம் கார்மெண்ட்ஸ் ஆடை வடிவமைத்து சப்ளை செய்யலாமா என கருத்து கேட்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் சந்தாதொகை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள கூறப்பட்டுள்ளது. பொருளாளர் நன்றி உரையுடன் இனிதே கூட்டம் நிறைவுற்றது.

தலைவர்

J. சந்திரசேகரன்.

## இளையபெருமாள் நல்லூர்

சங்க கூட்டம் ஸ்ரீகைலாசநாதர் கோயிலில் நடைபெற்றது. அதுசமயம்...

ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலில் ராம நவமி, திருக்கல்யாண விழாக்கள் சிறப்பாக நடைபெற்றது. கோடாலி கருப்பூர் பாண்டுவராய மற்றும் குழவடையான் கோத்திரக்காரர்களின் பிரார்த்தனை பெரும்பூசை ஸ்ரீ பிணி தீர்த்த அம்மன் கோயிலில் 7.4.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. தமிழ் புத்தாண்டு அன்று ஸ்ரீ தம்பா விநாயகர் ஆலயத்தில் காவடி உற்சவம் நடைபெற்றது. கார்குல குழந்தைகளும், பெரியோர்களும், மகளிர் அணியினரும் கலந்துகொண்டதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க உறுப்பினர், ரஞ்சித் பாலகுரு – பார்கவி அவர்களுக்கு திருமண வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

CREW அறக்கட்டளையிடமிருந்து ஸ்ரீ ஆனந்தவல்லி குழு & ஸ்ரீ பிணி தீர்த்தம்மன் குழுக்களுக்கு நிதி உதவி பெறப்பட்டது. பேருதவி புரிந்த திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும், திரு. TN. முத்துக்குமாரசாமி பிள்ளை, திரு. பத்மநாபன் பிள்ளை அவர்களுக்கும் திருமதி. சம்பூர்ணா இனியன், திருமதி. லக்ஷ்மி பாலசுப்பிரமணியன் ஆகியோர் நன்றி கூறினர். சங்க தலைவர் திரு. கு. கோவிந்தராசு அவர்கள், உரிய வகையில் முன்னேற்றத்திற்காக சுயதொழில் செய்ய வழிகாட்டி ஆலோசனை வழங்கினார்கள்.

நமது சங்க உறுப்பினர் ஆடிட்டர் S. கோவிந்தராசன் பிள்ளை அவர்களின் அன்னை வேம்பு ஆச்சி மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– கு. பாலசுப்ரமணியம்,

செயலாளர்.

## பின்னலூர் :

19–4–2025 சனிக்கிழமையன்று பின்னலூர் கணபதி நிலையத்தில் திரு. கணபதி மருதவாணன் அவர்களை ஆணையானராகக் கொண்டு சங்கத்தின் நிர்வாகிகள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவர் : திரு. பி.ஆர். நடராசன் பிள்ளை, செயலாளர் : திரு. மு. ஆனந்தநடேசன், பொருளாளர் : திரு. சோம. சந்திரசேகரன், அலுவலகச் செயலாளர் : திருமதி. மீரா குணசேகரன், துணைதலைவர் : திரு. பால. பிரபாகரன், துணை செயலாளர் : திரு. கனக. தேவனாதன், துணை செயலாளர் : திரு. இராம. நடராசன், துணை பொருளாளர் : திரு. வ. கார்த்திகேயன், ஒன்றிய பிரதிநிதி : திரு. பி.கே.எ. ராஜாமணி.

தீர்மானம் 1 : குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமை காத்து சங்கத்தைக் கட்டிக்காத்திட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தீர்மானம் 2 : நம் மண்ணையும், நம்மையும் விட்டுப் பிரிந்த நம் உறவுகள் சென்னை திரு. நம. திருநாவுக்கரசு பிள்ளை, திருமதி. வாலாம்பாள் சிங்காரம், திரு. சிவ. குணசேகரன் ஆகியோர் மறைவிற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து ஒரு நிமிடம் மௌனம் செலுத்தப்பட்டு நிகழ்ச்சி இனிப்பு – காரம் – சுவைமிகு தேனீருடன் நிறைவு செய்யப்பட்டது.

– ஆனந்த நடேசன்,
செயலாளர்.

## குமராட்சி ஒன்றியம்

20–4–25 அன்று குமராட்சி ஒன்றிய செயற்குழு கூட்டம் ஒன்றிய அரங்கத்தில் தலைவர் திரு. A.G.S. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்க ஆண்டு விழா ஜுன் கடைசி வாரத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. விழாக் குழு ஒன்று துணைத்தலைவர் பேராசிரியர் திரு. S. சிவக்குமார் பிள்ளை தலைமையில் நியமிக்கப்பட்டது. அக்குழுவின் வழிகாட்டுதல்படி பணி உயர்வு, பணி நிறைவு, விருது பெற்ற ஆசிரியர்கள், மற்றும் அதிக மதிப்பெண்கள் (10th & 12th) பெற்ற மாணவர்களை பாராட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. கிளை சங்க பொறுப்பாளர்கள் தங்கள் பகுதியில் பாராட்டப்பட வேண்டியவர்கள் பட்டியலை மே மாத இறுதிக்குள் ஒன்றிய பொறுப்பாளர்களிடம் அளிக்கும்படி கோரப்பட்டது. ஒன்றிய உறுப்பினர் ஒருவரின் கல்லீரல் அறுவை சிகிச்சைக்காக மனித நேயமிக்க சங்கத்தினர்கள் வழங்கிய தொகை ரூபாய் 51,500/– ஐம்பத்தி ஓராயிரத்து ஐநூறு பாதிக்கப்பட்டவருக்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

- S. இராமச்சந்திரன், செயலர்.
9486455841

## இளந்தோப்பு :

சங்க சிறப்புக்கூட்டம் 13–4–2025 அன்று சிவன்கோவில் வளாகத்தில் சிறப்புத்தலைவர் T. இரவி அவர்கள் முன்னிலையில் மாலை 7 மணிக்கு துவங்கியது.

அவ்வமயம் சுமார் 20 உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் துவங்கியது. 12–5–2025 அன்று வரவிருக்கும் சித்ராபௌர்ணமி விழாவை அய்யனார் கோவிலில் மிகவும் பிரமாண்டமாக சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு இளைஞர் அணியினர் மற்றும் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

அய்யானாருக்கு ஹோமம், பால்குடம், அலகுகாவடி எடுத்து வழிபடுவது என்பதை சங்கம் உறுதி செய்தது. இளந்தோப்பு கார்காத்தார் சங்கப் பொறுப்பாளர்கள் பணி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு முறை நடைபெற்றது. தலைவர் பதவிக்கு வெ. ராமமூர்த்தி அவர்களும் செயலாளர் பதவிக்கு வி. குருநாதன் அவர்களும், துணைத்தலைவர் பதவிக்கு பாலசுப்பிரமணியன் பிள்ளை அவர்களும், துணைச்செயலாளர் R. பிரபாகரன் (SSR), அவர்களும் தேர்வு செய்யப்பட்டு பதவி பிரமானம் செய்து வைக்கப்பட்டார்கள்.

பொருளாளர் திரு. R. ஞானசேகரன் அவர்களே தொடர்ந்து பொறுப்புவகிக்க எல்லோரும் குரல் ஓட்டு எடுப்பு எடுத்து ஆதரவு தெரிவித்தார்கள்.

புதிய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற கூட்டம் நன்றியுரையுடன் இனிதே நிறைவடைந்தது.

வெ. இராஜசேகரன், செயலாளர்.

## மயிலாடுதுறை :

செயற்குழு கூட்டம் 13–04–2025 அன்று கார்குழலி ஞானசேகரன் இணைச்செயலர் மகளிரணி அவர்களின் இறைவணக்கத்துடன் திரு. G. பிரதீப் இணைசெயலர் அவர்களின் வரவேற்புரைக்கு பின் செயலர் அறிக்கையினை வாசித்திடவும் N. முத்துகுமாரசாமி பொருளர் மூன்று இனங்களின் பராமரிக்கப்படும் சங்க வரவு செலவினை பதிவு செய்தார். வரவு – செலவினம் கைத்தட்டலுடன் ஏற்கப்பட்டது. திருமதி. அகிலா ரெத்தினகுமார் மகளிரணி செயலர் 08–03–2025 நடைபெற்ற உலக மகளிர் தினவிழா நிகழ்ச்சிகளை பற்றி தனது கருத்துக்களை பதிவு செய்தார். திருமதி. வசந்தி பன்னீர்செல்வம் மகளிரணி பொருளர் வரவு செலவுக் கணக்கினை பதிவு செய்தார். தலைவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் துணை தலைவர் செயற்குழுவினை தலைமை ஏற்று சங்க கட்டடத்தின் சாப்பாடு கூடத்திற்கு 80 நாற்காலிகள் வழங்கிய கார்குல சொந்தங்களுக்கு நன்றியினை தெரிவித்தார். மயிலாடுதுறை சங்கத்தின் பகுதிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கு 5 செயற்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த கருத்துக்கு செயற்குழு உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்தனர். பின்னர் மகளிரணியினர் 27–04–2025 முதல் 29–04–2025 வரை மூன்று நாட்களுக்கு மாலை நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு செயற்குழுவில் அனுமதி பெறப்பட்டது. பின்னர் சங்கத்தின் வளர்ச்சிகளை பற்றி முன்னாள் மாநில பொதுசெயலர் திரு. M. சத்தியபால் வர்த்தக சங்கத்தின் தலைவர் செந்தில் பைப் உரிமையாளர் திரு. S. மதியழகன், மாநில துணைதலைவர் திரு. S. ஷண்முகம் பிள்ளை, சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. R. பாலசுப்பிரமணியன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்தனர். நிறைவாக இணைசெயலர் சரவணன் அவர்களின் நன்றியுரையுடன் செயற்குழுக் கூட்டம் நிறைவுற்றது.

- S. தில்லைநாயகம், செயலர்.

## செம்பனார்கோவில்

சங்க கூட்டம் 06.04.2025 அன்று நமது சங்க உறுப்பினர் திரு வாசன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கம், வாசன் அவர்களின் மருமகள் திருமதி சாதனா; வரவேற்பு திரு. செந்தில்நாதன்; சென்ற மாத சட்டறிக்கை மற்றும் வரவு செலவுகளை சங்க பொருளர் M.C. செல்வராஜ் அவர்கள் வாசித்திட கூட்டம் இனிதே துவங்கியது. மேலும் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட "பிரம்மகுமாரிகள்" அமைப்பை சேர்ந்தவர்கள், ஆத்மா, உயிர் பற்றியும் உயிருக்கு தேவையான அனைத்தையும் இறைவன் அளிக்கிறார். அவரே அனைவருக்கும் அனைத்தையும் கொடுக்கும் வள்ளலாக உள்ளார். இறைவனை அடைய சிறந்த வழி தானம், தவம் என்றும், மனித மனக்குதிரையை அடக்க சிறந்த வழி தவம் என்றும், சிறப்பான கருத்தினை எடுத்துரைத்த சகோதரிக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. மேலும், சங்க உறுப்பினர் திரு. மதியழகன் அரிய பல "நகைச்சுவை" கூறி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். திரு. A.M. சேகர் அவர்கள், "பந்திக்கு முந்து படைக்கு பிந்து" என்ற பழமொழியின் விளக்கத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். முன்னாள் மாநில துணைத்தலைவர், மற்றும் திரு. வரதராசன் பிள்ளை ஆகிய இருவரும், திரு. வாசன் அவர்களின் குடும்ப சிறப்புகளை எடுத்துரைத்தார்கள். சங்க உறுப்பினர் திரு. ஆனந்த் பிள்ளை அவர்களுக்கு 50வது பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. சங்க செயலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் 9 மணியளவில் இனிதே முடிவுற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்

## பரசலூர் :

06–4–25 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு தலைவர் க. கோவிந்தராஜன் இல்லத்தில் பானுமதி கோவிந்தராஜன் இறைவணக்கம் பாட க. கோவிந்தராஜன் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த தலைவர் தலைமையில் கூட்டம் துவங்கியது.

துணை செயலர் ஏ. ராமலிங்கம் பிள்ளை சென்ற மாத அறிக்கையும், பொருளர் S.M. விஜய் பிள்ளை சென்ற மாத நிதிய அறிக்கையும் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதிய அறிக்கையும் வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

பரசலூர் வள்ளலார் நகர் B. கணேஷ்குமார் தந்தையார் S. பாலசுப்பிரமணியன் பிள்ளை இயற்கை எய்தியதற்கு சங்கப் பொறுப்பாளர்கள், மற்றும் உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு இறுதி சடங்கினை செய்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசு R. பிரவிண், பெண்களுக்கான பரிசு R. ஈஸ்வரிக்கும் முறையே பானுமதி, மற்றும் கோவிந்தராஜன் வழங்கினர்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் பானுமதி, கோவிந்தராஜனுக்கு முறையே S. வெங்கடேசன் R. ஈஸ்வரி சால்வை அணிவித்தனர்.

சென்ற மாதம் இயற்கை எய்திய G. பாலசுப்பிரமணியன் பிள்ளை அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நக்கீரர் தெரு. A. மதிவாணன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. சரவணன்,

செயலர்.

Cell : 9894960438

## ஆக்கூர் :

சங்கக் கூட்டம், சிவன் கோவிலில் 13-4-2025 அன்று திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நல்லாசிரியர் திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்களின் இறைவணக்கப்பாடலுடன் கூட்டம் தொடங்கியது. திரு. A. பாலன் பிள்ளை அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். கௌரவத்தலைவர் டாக்டர்திரு.K.பாலகிருஷ்ணன்பிள்ளை அவர்கள்தமது முன்னிலை உரையில், சங்கக்கூட்டம் நடத்துவதற்கு வசதியாக சங்கத்திற்கு நாற்காலிகள் வாங்க வேண்டும் எனவும் சிவன் கோவில் கும்பாபிஷேக திருப்பணி விரைவாக நடைபெற உறுப்பினர்கள் உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டு, வரும் விசுவாவசு ஆண்டு பஞ்சாங்கம், உறுப்பினர்களுக்கு வழங்க சங்கத்திற்கு நன்கொடை வழங்கினார்கள். புத்தாண்டு அன்று மாலை 6.00 மணியளவில், ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் சுவாமி திருக்கோவிலில் நடைபெறும் பஞ்சாங்கம் படித்தல் நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார்கள்.

சங்கத்தலைவர், திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் தமது உரையில், ஆண்டுதோறும் நடைபெறும் ஆக்கூர் மாரியம்மன் கோவில் தீமிதி உற்சவ முதல் நிகழ்வான கரகம் எடுத்தல் நிகழ்வு, தமது உபயமாக நடைபெறுகிறது. அதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்கள். உறுப்பினர்களுக்கு பஞ்சாங்கம் வழங்க, தமது பங்காக சங்கத்திற்கு நன்கொடை வழங்கினார்கள்.

கூட்ட நிகழ்வில் புதியதாக, "மாதந்தோறும் நாயன்மார்களின் வரலாறு கூறுதல்" என்ற நிகழ்வு சேர்க்கப்பட்டது. அதில் இன்று முதல் வரலாறாக "தாதை தாள் மழுவினால் எறிந்த அம்மையான்" சண்டேசுவர நாயனார் வரலாறு, சங்கப் பொருளாளர், நல்லாசிரியர் திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்களால் கூறப்பட்டது. உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கேட்டனர். தொடர்ந்து, அவர்களால் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சங்கம் அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

செயலாளர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை அவர்களால் சென்ற மாதக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தொடர்ந்து உறுப்பினர்கள் தத்தம் கருத்துகளை தெரிவித்தனர். இறுதி நிகழ்வாக திரு. G. பிரகதீஸ்வரன் பிள்ளை அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

ஆக்கூர், இந்திராகாந்தி வீதி, திரு. N. ராமச்சந்திரன் பிள்ளை, மடப்புரம் மலர்வனத்தெரு, திருமதி. கோ. தனலெட்சுமி அம்மாள் இவர்களிருவரும் இறைவனடி சேர்ந்தமைக்கு இரங்கல் தெரிவித்து அவர்களின் ஆன்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவுற்றது.

- N.G. செல்வகுமார், தலைவர்

9942480320

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 12-04-2025 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களைத் தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசினார். பின்பு சென்ற 06–04–2025 அன்று திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் திருக்கோவிலில் திரு. சீனிவாசன் – உமா தம்பதியினர் மணி விழாவை சிறப்பாக நடத்தி கொடுத்த சங்க உறுப்பினர்களுக்கு நன்றிதெரிவிக்கப்பட்டதோடு,சங்கஉறுப்பினர்களுக்கு ''விசுவாவசு'' வருட பஞ்சாங்கமும் வழங்கப்பட்டது.

பஞ்சாங்கம் பெற்றுக்கொண்ட சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டப் பின்னர், தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- B. இலட்சுமணன், தலைவர்.

9443783743

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 13–04–2025 அன்று சங்கத் தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க செயற்குழு உறுப்பினர் Er. S. சண்முகம், B.E., அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (1) சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தமிழ்புத்தாண்டு வாழ்த்தும், ஏப்ரல் மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. (2) 27–4–2025 ஞாயிறு அன்று சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்க 22வது ஆண்டு விழா அழைப்பிதழை ஏற்று உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. (3) 80. இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் 18–4–2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 – 7.30 காப்பு கட்டி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாவும் 10–ம் நாள் 27–4–2025 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு தீமிதி விழாவும் 11–ம் நாள் மஞ்சள் விளையாட்டு விழாவும் நடைபெற இருப்பதால் அனைவரும் தினமும் கோயிலுக்கு வருகை தந்து அம்பாளின் அருளைப் பெறவும் விழா சிறக்க அனைவரும் ஒத்துழைப்புத்தரவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (4) இளைஞர் அணி அ. இரத்தினவேல் சுப்ரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

## இளையமுது கூடம் :

சங்க கூட்டம் 13–04–2025 அன்று சங்க செயலர் திரு. G. சுப்பிரமணியன். அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் A. நடனம் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் தொடங்கியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க பொருளர் அவர்கள் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டு ஏற்பளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் விசுவாவசு ஆண்டு பஞ்சாங்கம் வழங்கப்பட்டது.

பஞ்சாங்கம் வாங்கி வழங்கிய நம் சங்க உறுப்பினர் ஹேமலதா டிரேடர்ஸ் உரிமையாளர் V. அம்பலவாணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

சங்க வளர்ச்சி குறித்து நம் சங்க உறுப்பினர் தமிழாசிரியர் திரு. G. சிவக்குமார் அவர்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

சங்க செயலர் அவர்களால் வழங்கப்பட்ட இனிப்பு மற்றும் தேனீர் வழங்க அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேற்றப்பட்டது.

## பூம்புகார் - மேலையூர் :

சங்க கூட்டம் (6–4–2025) அன்று மழலை M.V. நித்திஷ் அவர்களின் இறைவணக்கத்துடன் திரு. M. பரணிதரன் இல்லத்தில் நடைபெற்றது.

ஆன்மீக சுற்றுலா செல்ல விவாதிக்கப்பட்டு ஏப்ரல் 20 ஆம் தேதிக்குள் சுற்றுலா செல்பவர்கள் சங்க நிர்வாகிகளிடம் பெயர் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டு கொள்ளப்பட்டது.

சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. R.S. வரதராஜன் அவர்கள் விசுவாவசு வருட பஞ்சாங்கம் சங்க உறுப்பினரக்ள் அனைவருக்கும் வழங்கினார்கள். அதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சென்ற கூட்டத்தில் முடிவு எடுத்தது போல் சங்கத்தின் பொது கல்வி நிதி இன்று முதல் தொடங்கப்பட்டது.

பூம்புகார் வெள்ளையிருப்பு தெரு தெய்வதிரு. அம்பலவாணன் பிள்ளை – நலமுடன் இந்திரா

அவர்களின் மூத்த மகன் சுரேஷ் அவர்களின் மறைவிற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதியில் தலைவர் திரு. N. பாண்டியன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. விஜயராகவன்,

செயலாளர்.

**9994635306**

## நெடுங்காடு :

சங்க கூட்டம் வரிச்சிக்குடி திரு. ரெங்கநாதன் இல்லத்தில் நடைபெற்றது. இறைவணக்கம் செல்வி. மு. அக்வியா பாடினார். இந்த ஆண்டு சித்திரை நிறைமதி நாள் விழாவை மே 12–ஆம் தேதி நெடுங்காட்டில் நடத்துவது என்றும் இந்த ஆண்டு நமது சங்க உறுப்பினர்கள் AVC முதல்வர் – P. பாலசுப்ரமணியம் PKIET முதல்வர் – திரு. மணிகண்டன் மகளிரணி செயலர் – பணி நிறைவு பெற்ற திருமதி. அபூர்வம் நமச்சிவாயம் கல்வி நிதிப்பொருளாளர் – சஷ்டியப்த பூர்த்தி கண்ட திரு. முத்துக்குமரன் – கலைமகள் முத்துகுமரன் செல்வி. அகல்யா – Cricket Player ஆகியோருக்கு பாராட்டு செய்ய முடிவு செய்யப்பட்டது. நமது இன மருத்துவர் திரு. பிரவின் பாபு அவர்களைத் தொடர்பு கொண்டு நமது இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு சிறப்பு மருத்துவ முகாம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு பொறுப்பாளர்களே அடுத்த ஆண்டும் தொடர முடிவு செய்யப்பட்டது. கார்நிதியம் தொடர்பாக ஆலோசனை தனியாக கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. சித்திரை நிறைமதி நாள் விழாவிற்கு குடும்பத்திற்கு ரூ. 300/– அளிக்க முடிவு செய்யப்பட்டது.

பரிசு குலுக்கலில் : I - மு. அக்ஷயா, II - R. பாண்டியன், III - S. விஜயராகவன் பரிசு பெற்றனர்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் பஞ்சாங்கம் அளிக்கப்பட்டது.

– திரு. S. ரெங்கநாதன்,

செயலாளர்.

## திருவிடைமருதூர் :

சங்கக் கூட்டம் 20–04–25 அன்று திருவாலங்காடு பெரியவர் திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் திரு. சேதுராமன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் திரு. K. சுந்தர் மற்றும் பொருளர் திரு. T.S. இராஜமோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வரவேற்புரை நல்கிய செயலர் திரு. க. பொற்செழியன் அவர்கள் திருவிடைமருதூர், திருவிசநல்லூர், திருமாந்துறை, கெளுத்தூர், திருவாவடுதுறை மற்றும் திருவாலங்காடு நம் இன சொந்தங்களை வரவேற்று பேசினார். மேலும் அவர் உணவே மருந்து என்ற தலைப்பில் உணவில் தினம் ஒரு கீரை, பச்சை காய்கறிகள் இடம்பெறல் அவசியம். சுண்டப் பசித்த பின் புசி, நொறுங்கத் தின்றால் நூறு வயது என்பன போன்ற அனுபவ உண்மையை நினைவூட்டினார். அடுத்து நம் சங்கம் மங்கல சந்திப்பு நடத்த வேண்டும் எனில் பிற சங்கங்கள் மங்கல சந்திப்பு நிகழ்வை உற்று நோக்கி பயிற்சி பெற வலியுறுத்தினார். பொருளர் திரு. T.S. இராஜமோகன் நம் இன மாணவர்கள் உயர் கல்வி பெற மரியாதைக்குரிய திரு. வெங்கடேசன் பிள்ளை கல்வி உதவித்தொகை தொடர்ந்து பல வருடங்களாக வழங்கி வருவதை நினைவூட்டினார். எட்டாவது வள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செல்வி. K. மீனா திருக்குறள் கூறி விளக்கம் அளித்தார். திரு. G.K. சுரேஷ் குட்டிக்கதை சொல்லி அனைவரையும் மகிழ்ச்சியூட்டினார்.

கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்த திரு. செந்தில் மற்றும் திரு. நவீன் சங்கர் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். மகளிரணியினர் திரளாக கலந்து கொண்டது சிறப்புக்குரியது.

இறுதியில் திரு. G.K. சுரேஷ் நன்றி கூற தேநீர் விருந்து அளிக்கப்பட்டு கூட்டம் நிறைவுற்றது. அடுத்த கூட்டம் சூரியனார் கோவில் உறவுகள் நடத்த அழைப்பு விடுத்தனர்.

– க. பொற்செழியன்,

செயலர்.

## கும்பகோணம் :

29–ஆம் ஆண்டு மங்கல சந்திப்பு 06–04–25 அன்று கரும்பாயிரம் பிள்ளையார் சன்னதி தெருவில் உள்ள என்.எஸ். மஹாலில் காலை 8 மணிக்கு பதிவு செய்யப்பட்ட வரன்களுக்கு விரைவில் திருமணம் நடைபெற வேண்டி சுயம்வர பார்வதி கலா ஹோமம் சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு மங்கல சந்திப்பு புத்தக வெளியீட்டு விழாவிற்கு தலைவர் தி.மா. வைத்தியநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள், மண்டல துணைத் தலைவர் எஸ். விஜயகுமார், குடந்தை சங்க துணை தலைவர்கள் பாலகுரு, ராஜாராமன், சந்திரமோகன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மங்கல சந்திப்பு நிகழ்விற்கு வந்திருந்த அனைவரையும் குழு தலைவர் எம்.ஆர்.கே. பாண்டியன் அவர்கள் வரவேற்றார்கள். மங்கல சந்திப்பு நிகழ்வில் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் திரு. கே.கே. ஆர். சுரேஷ், மாநில அமைப்பாளர் கயிலை. சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றி வரன் விவர பட்டியலை வெளியிட்டார்கள். மற்றும் கோவை பேரூராதீனம் சோழ மண்டல தம்பிரான் சிவப்பிரகாச அடிகளார் கலந்து கொண்டு அருள் ஆசி வழங்கினார்கள்.

M. வேலாயுதம் அவர்கள் சென்ற 2024 (28வது மங்கல சந்திப்பில்) தனது மகள் திருமணம் முடிந்ததை நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள்) மங்கல சந்திப்பு விழா சிறப்பாக நடக்க நிதி உதவி அளித்த உத்தமர்கள், ஹோம சாமான்கள் கொடுத்து உதவிய எஸ் சுப்பராயன், ஹோமம் செய்வித்த அய்யர் சம்பாவனை கொடுத்து உதவிய துணை தலைவர் C. வைத்தியநாதன்,

பதிவு செய்த வரன்களின் பெற்றோர்களை வரவேற்று அவர்களுக்கு புத்தகத்திற்கான டோக்கன் கொடுத்து புத்தகத்தை விநியோகம் செய்து சிறப்பாக செயல்பட்ட துணைச்செயலாளர் எம். சாமிநாதன் தம்பதியர், வடபழனி இளங்கோ, எம்.ஆர்.கே. அசோக்பாலாஜி அவர்களுக்கும் களப்பணி ஆற்றிய சதா ராஜேந்திரன், சூரியநாராயணன், குணசீலன், பெண்ணாடம் ராஜேந்திரன், மகேஷ், தியாகராஜன் ஆகியோர் பணிகள் அனைவரும் பாராட்டும் வண்ணம் இருந்தது. விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது. விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்கள் நன்றி கூறினார்கள்.

– எஸ். விஜயகுமார்,
செயலாளர்.

## தஞ்சை :

i) சங்க மூத்த உறுப்பினர்களான திரு. G. திருநாவுக்கரசு, திருமதி. G. திருநாவுக்கரசு, திருவையாறு

ii) திருமதி. MRP. அவர்களுக்கும்

iii) திருமதி. B. சாவித்திரி பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், சங்க நிர்வாகிகள் திருமிகு. S. மோகன்குமார், திருவாளர்கள் S. மதியழகன், R. சண்முகம், D. சுகுமாரன், 10–4–2025–ல் சந்தித்து அவர்களுக்கு பொன்னாடைப் போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது.

அவர்களின் கடந்த கால சங்க நிகழ்வுகளை, சங்க நிர்வாகிகளோடு பரிமாறிக் கொண்ட விதம் சிறப்பாக இருந்தது.

எஸ். மதியழகன்.

## காமதேனு சமூக நல அறக்கட்டளை, தஞ்சாவூர்.

### 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு உதவித்தொகை வழங்கிய பெரியோர்கள்

| | |
|---|---|
| 1. முனைவர். திருமதி. R. சாவித்திரி | – 15000.00 |
| 2. திருமதி. R. கலைச்செல்வி | – 10000.00 |
| 3. திருமதி. துர்கா செல்வி திருஞானசம்பந்தம் | – 10000.00 |
| 4. திரு. திருஞானசம்பந்தம் | – 10000.00 |
| 5. திருமதி. லதா ராஜசேகர் | – 10000.00 |
| ஆக கூடுதல் | – 55000.00 |

### 2024 – 2025 – ஆம் ஆண்டில் அறக்கட்டளை மூலமாக உதவி பெற்றவர்கள்

| S.No | தகப்பனார் / தாயார் | மாணவர் பெயர் | பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | ப. சுயம்புநாதன் | S. கீர்த்தனா | 5000.00 |
| 2 | பாபு வெங்கடேசன் | பா. லோகேஷ் | 5000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | M. ஞானப்பிரகாசம் | G. ரித்திகா | 5000.00 |
| 4 | R. உமாமகேஸ்வரி | R. விக்னேஷ் | 5000.00 |
| 5 | S. கயல்விழி | S. பிரீத்தி | 5000.00 |
| 6 | N. சக்திவேல் | S. ஆகாஷ் | 5000.00 |
| 7 | C. ஆனந்த் | A. ஸ்ரீ ஹரிஷ் | 5000.00 |
| 8 | S. திலகா | S. பாவேந்தர் | 5000.00 |
| 9 | R. அனுசியா | V. நந்தினி | 5000.00 |
| 10 | B. ரூபாதேவி | S. ஆகாஷ் | 5000.00 |
| 11 | V. சிவரஞ்சனி | V. அரவிந்ராஜன் | 5000.00 |
| 12 | S. குமாரஜோதி | S. அபிநயா | 5000.00 |
| 13 | G. கதிரேசன் | K. கீர்த்திகா | 5000.00 |
| 14 | T. குமுதவல்லி | M. நவீன்குமார் | 5000.00 |
| 15 | T. குமுதவல்லி | M. மேகலா | 5000.00 |
| 16 | K. நடராஜன் | S. சுவேதா | 5000.00 |
| 17 | N. சரோஜா | S. உமாசக்தி | 5000.00 |
| 18 | G. சரவணன் | S. சீதா தேவி | 5000.00 |
| 19 | V. பார்த்திபன் | P. காயத்ரி | 5000.00 |
| 20 | B. புவனேஸ்வரி | B. ஷாஷாபாரதி | 3000.00 |
| | கூடுதல் | | 98,000.00 |

## மதுரை :

13-4-2025 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் துணைச்செயலாளர் N. இராமலிங்கம் கடவுள் வாழ்த்து பாடினார்.

முனைவர் K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது செயற்குழு உறுப்பினர்கள் க. இரோஜேந்திரன் & R. பசுங்கிளி மற்றும் உறுப்பினர்கள் & மாநில துணை தலைவர் S. உமையொருபாகம் கலந்து கொண்டனர்.

மேலும் நமது சங்கத்தின் நிதியை பெருக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டது சங்கத்தின் சார்பாக அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. சங்க பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன்,
செயலாளர்.
9443831474

## திருநெல்வேலி :

19-03-25 அன்று கார்காத்தார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சீவலப்பேரி வடக்கு செல்வி அம்மன் கோவிலில் Dr. S. பொன்னையா பிள்ளை MD FICP FCGP அவர்கள் தலைமையில் கோவில் நிர்வாகமும் திருநெல்வேலி கார்காத்தார் சங்கமும் இணைந்து கல்யாண மாலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சுமார் 200 பயோ டேட்டாக்கள் வந்தன. சுமார் 100 நபர்கள் கலந்து கொண்டனர். விரைவில் திருமணம் நடக்கவும், திருமண தடைகள் நீங்கவும், புத்திர பாக்கியம் கிடைக்கவும் அம்மனுக்கு சிறப்பு பூஜை செய்தும், பூஜையில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் கோவில் பிரசாதம் வழங்கப்பட்டது. மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது. விழா நிகழ்ச்சியை கோவில் நிர்வாகமும், திருநெல்வேலி கார்காத்தார் சங்க தலைவர் செயலர் பொருளாளர் மிகவும் சிறப்பாக செய்து இருந்தார்கள்.

**பரலி நெல்லையப்பருக்கு நினைவு அஞ்சலி :**

28-03-25 அன்று காலை 10 மணி அளவில் திருநெல்வேலி கார்காத்தார் சங்க கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் திருநெல்வேலி மேயர் கிட்டு (எ) G. ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் பரலி நெல்லையப்பருக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்கள். அதனை தொடர்ந்து M. சண்முகசுந்தரம் பிள்ளை M. பாலசுப்பிரமணியன் (பரலி நெல்லையப்பரின் பேரன்கள்) அவர்களும் மற்றும் சங்க பொறுப்பாளர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்கள். முருக இளங்கோ பரலி நெல்லையப்பரின் வாழ்க்கை வரலாறு, சுதந்திர போராட்டம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்கள். கார்குல சொந்தங்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். விழா ஏற்பாடுகளை கார்குல நிர்வாகிகள், செயலர் இராமசுப்பிரமணியன் சிறப்பாக செய்து இருந்தார்கள்.

– செ. இராமசுப்பிரமணியன்,
செயலாளர்.

## கோவை :

சங்க கூட்டம் 23-3-25 அன்று திரு. C. கருணாநிதி அவர்களின் புதிய இல்லத்தில் நடைபெற்றது. திருமதி. விஜயா செல்லப்பன் அவர்கள்

கடவுள்வாழ்த்துபாடினார்கள். அனைவரையும்தலைவர் வரவேற்று பேசினார். திரு. C. கருணாநிதி அவர்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

மூத்த உறுப்பினரும் சிறந்த முறையில் ஆக்கபூர்வமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற திரு. சைலப்பன் அண்ணா, Cost ஆடிட்டர் அவர்களின் 25 ஆண்டு அயராத பணியை பாராட்டி, பாராட்டு பத்திரமும், நினைவு பரிசையும் தந்து மகிழ்ந்தோம். உறுப்பினர் அனைவரும் அவருக்கு பாராட்டு தெரிவித்தனர். திரு. C. கருணாநிதி அவர்கள் திரு. சைலப்பன் அண்ணா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினார்கள்.

கோவை திருமண தகவல் மையத்திற்காக தனியாக ஒரு வாட்ஸ் அப் குரூப் உருவாக்க ஆலோசனை சொல்லப்பட்டது. திரு. C. கருணாநிதி அவர்களும், திருமதி. சுந்தரி சிவராஜகோபால் அவர்களும் அந்த வாட்ஸ் அப் குரூப்புக்கு பொறுப்பாளர்களாக இருக்க முடிவு செய்யப்பட்டது.

திருப்பூரில் உள்ள நமது சொந்தங்கள் அனைவரையும் அழைத்து ஒரு மாதாந்ரதிர கூட்டம் நடத்த ஆலோசனை செய்யப்பட்டது. அதற்கு திரு. சைலப்பன் மற்றும் திரு. வள்ளிநாயகம் ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

புதிய உறுப்பினர்கள் திரு. C. விஸ்வலிங்கம் அவர்களையும் அவரது மனைவி லலிதா அவர்களையும் உறுப்பினர்கள் வரவேற்றார்கள்.

நமது சங்கத்தின் உறுப்பினரான திருவேங்கடம் அவர்களின் மனைவி திருமதி. மகாலட்சுமி அவர்கள், SARA NEEDLE CRAFTS என்ற ஆயத்த ஆடைகள், Embroidery Blouses தயார் செய்து விற்பனை செய்யும் நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்கள். அவர்களுக்கு அனைத்து சங்க உறுப்பினர்களும் பாராட்டையும், ஆதரவையும் தெரிவித்து மகிழ்ந்தார்கள்.

திருமதி. விஜயா சைலப்பன் அவர்கள் ஏப்ரல் மாதத்தில் சங்க உறுப்பினர்கள் ஒரு நாள் சுற்றுப்பயணம் செல்ல ஆலோசனை கூறினார்கள்.

மண்டல செயலாளர் திருவேங்கடம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

ஏப்ரல் மாத கூட்டம், முன்னாள் தலைவர் தெய்வத்திரு. நமச்சிவாயம் அவர்கள் இல்லத்தில் 13–4–25 அன்று நடைபெற்றது. செல்வி கிரியா அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். திரு. வள்ளிநாயகம் அவர்கள் வரவேற்பு உரை ஆற்றினார்கள். புதிய உறுப்பினர் திருமதி. விஜயலட்சுமி சிவகுருநாதன் அவர்களை உறுப்பினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

தெய்வத்திரு. முன்னாள் சங்க தலைவர் திரு. நமச்சிவாயம் அவர்கள் சங்கத்திற்கு ஆற்றிய முக்கிய பணிகளைப் பற்றி மூத்த உறுப்பினர் திரு. சோமசுந்தரம் அவர்கள் நினைவு கூர்ந்து பாராட்டி மகிழ்ந்தார்கள். கோவை கார்காத்த சங்கத்தின் முக்கிய நிகழ்வுகளை எழுதித் தரும்படி மூத்த உறுப்பினரும் கௌரவ ஆலோசகருமான திரு. சோமசுந்தரம் அவர்களை சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக கேட்டுக் கொண்டனர். அந்த குறிப்புகளை வருகின்ற ஆண்டு விழாவில் புத்தகமாக வெளியிட முடிவு செய்யப்பட்டது.

திருப்பூரில் வசிக்கும் நம் இன மக்களை சந்திக்க ஏப்ரல் 20 அன்று செல்வதற்கு திட்டமிடப்பட்டது. நம் சங்க உறுப்பினர்களின் முகவரி சரிபார்க்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. இந்த பணியை அர்ப்பணிப்போடு, மிகச் சிறப்புடன் நிறைவு செய்த திரு. சிவராஜகோபால் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்கத்தின் வளர்ச்சி பற்றி ஆலோசனைகள் கூறப்பட்டன. செல்வி. கிரியா, திருமதி. விஜயலட்சுமி, திருமதி. நமச்சிவாயம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. திரு. மகாராஜன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

---

## வருந்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, செம்மங்குடி திரு. M. மணி பிள்ளை அவர்கள் 7–4–25 காலை இயற்கை எய்தினார் என்பதையும்

சீர்காழி தாலுக்கா, செம்மங்குடி திருநாவுக்கரசு பிள்ளை அவர்களின் மாமியார் சுலோச்சனா அம்மையார், 10–4–25 காலை இயற்கை எய்தினார் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

# தவணை முறை விற்பனை

## HIRE PURCHASE

மேலையூர் ச.அன்பழகன் 98413 73184

சென்ற இதழ் தொடர்ச்சி...

**தவணை முறையில் வாங்கியவர் உரிமைகள்**

1 எப்போது வேண்டுமானாலும் பொருளின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்து விட்டு மீதமுள்ள தொகையையும் கொடுத்த பிறகு பொருளை வாங்கிக் கொள்ளலாம்.

2 பொருள் தேவை இல்லை என்றால் அதற்குண்டான அபராதத்தொகை ஏதேனும் இருந்தால் அதனைச் செலுத்தி விட்டு பொருளை உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்து விடலாம்.

3 உரிமையாளரின் ஒப்புதலுடன் அந்தப் பொருளை வேறு ஒரு நபருக்கு அந்த நிபந்தனைகளுடன் மாற்றிக் கொடுக்கலாம்.

**தவணை முறையில் வாங்கியவர் பொறுப்புக்கள்**

1 தவணைத் தொகையைத் தவறாமல் கட்டுதல்.

2 தவணை முறையில் எடுத்த பொருளைக் கவனமுடன் பாதுகாத்தல். அதனைச் சரியான முறையில் பயன் படுத்தாமல் அப்பொருளுக்கு ஏதேனும் சேதம் விளைவித்தால் போதிய நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்கும்.

3 அப்பொருள் எங்கே வைக்கப்பட்டிருக்கும் என்பதை உரிமையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

4 அவர் முழுத் தவணைத் தொகையையும் செலுத்தி அதன் உரிமையைப் பெற்ற பிறகுதான் அப்பொருளை விற்கவோ அடமானம் வைக்கவோ செய்யலாம்.

**பொருளின் சொந்தக்காரரின் உரிமைகள்**

பொருளைத் தவணை முறையில் வாங்கியவர் தவணைத் தொகையை செலுத்தத்தவறினாலோ அல்லது உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகளை மீறினாலோ பொருளின் சொந்தக்காரருக்குக் கீழ்க்கண்ட உரிமைகள் உண்டு.

1. தவணையில் வாங்கியவர் கொடுத்திருந்த முன் பணத் தொகையை திருப்பித்தராமல் வைத்திருக்கலாம்.

2. ஏற்கனவே கொடுத்திருந்த தவணைத் தொகைகளை வைத்துக் கொள்வதுடன் மீத முள்ள தவணைத் தொகையையும் வசூலித்துக் கொள்ளலாம்.

3. தவணையாகக் கொடுத்த பொருளை நீதி மன்ற உத்தரவுக்கு ஏற்பவும் பொருளின் தன்மைக்கு எற்பவும் மொத்த விலையில் எந்த அளவு தவணைத் தொகை கட்டியுள்ளார் என்பதற்கு ஏற்பவும் திரும்பப்பெற்றுக் கொள்ளலாம்.

4. பொருளில் ஏதேனும் சேதாரம் இருந்தால் அதற்கு நஷ்ட ஈடு கோருதல்.

**தவணை முறையில் வாங்குவதற்கான உடன் படிக்கை**

தவணை முறையில் பொருள் விற்பனை செய்யும் போது எழுதிக் கொள்ளப்படும் உடன் படிக்கை இரண்டு வகைப்படும்.

1. இந்த முறையில் பொருட்கள் நிதி உதவி செய்பவரால் பொருளின் வியாபாரியிடமிருந்து வாங்கப்படும்போது நிதி உதவி செய்பவர் வாடிக்கையாளரிடமிருந்து உடன்படிக்கை எழுதி வாங்கிக் கொள்கிறார்.

அதன் கீழ் தான் வாடிக்கையாளர் பொருளின் உரிமை பெறுவார்.

முழு தவணைத் தொகையும் கொடுக்கபப்ட்ட பிறகு வாடிக்கையாளர் பொருளை வாங்க விரும்பினால் அதற்குண்டான சிறிய விலையை நிதி உதவி செய்தவரிடம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்.

பொருளின் சொந்தக்காரர் அதற்குண்டான விலையை நிதி உதவி செய்பவரிடமிருந்து பெற்றுக் கொள்வார். நிதி உதவி செய்பவர் அத் தொகையை வாடிக்கையாளரிடமிருந்து தவணை முறையில் வசூலித்துக் கொள்வார்.

2. இந்த இரண்டாவது முறையில்

வாடிக்கையாளர் பொருளை வியாபாரியிடமிருந்து வாங்கிக் கொண்டு உடன்படிக்கையை நிதி உதவி செய்தவருடன் செய்து கொள்வார்.

நிதி உதவி செய்தவர் வியாபாரிக்கு வாடிக்கையாளர் சார்பில் பணம் கொடுத்துள்ளதற்கு வாடிக்கை யாளர் பொருளை வைத்துக் கொள்வார். வாடிக்கையாளர் உடன்படிக்கையில் சொன்ன நிபந்தனைகளின் படி நடக்காவிட்டால் நிதி உதவி செய்தவர் அப்பொருளைக் கைப்பற்றிக் கொள்ள உரிமை உள்ளது.

**உடன்படிக்கையில் இடம் பெற வேண்டியவை**

1. எந்த பொருள் பற்றிய உடன்படிக்கையோ அப்பொருள் பற்றிய விபரம்.

2 அந்தப் பொருளின் விலை.

3 உடன்படிக்கை துவங்கும் நாள்.

4 தவணைத்தொகை மற்றும் மொத்த தவணைத் தொகைகள் தவணை செலுத்த வேண்டிய நாள் யாரிடம் செலுத்தப்பட வேண்டும் என்ற விபரம்.

**தவணை முறை விற்பனை உடன்படிக்கையை முடிவு கட்டுதல் கீழ்க்கண்ட வழிகளில் தவணை முறை உடன்படிக்கை முடிவு கட்டப்படலாம்**

1. உடன்படிக்கை நிபந்தனைப்படி

எந்த சூழ்நிலையில் உடன்படிக்கை முடிவு கட்டப்படலாம் என்பது உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும். அதன்படி தவணை முறையில் வாங்கியவர் பொருளைத் திருப்பிக் கொடுத்தாலோ, அல்லது அவர் நிபந்தனைகளின்படி நடக்கவில்லை என்று பொருளின் உரிமையாளர் அறிவிப்புக் கொடுத்தாலோ அல்லது தவணை முறையில் எடுத்தவரே உடன் படிக்கையை முடிவு கட்ட அறிவிப்புக் கொடுத்தாலோ முடிவு கட்டப்படலாம்.

2, செயல் பாட்டின் மூலம்

தவணை முறையில் வாங்கியவர் அப்பொருளை வாங்கிக் கொள்ள முடிவு எடுத்து விட்டால் உடன்படிக்கை முடிவு கட்டப்படலாம்.

3 புதுப்பித்தல்

உடன்படிக்கையில் பங்கு பெற்றுள்ள இருவரும் அந்த உடன் படிக்கையை ரத்து செய்து விட்டு புதிதாக ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளலாம்.

4 எவரேனும் ஒருவர் அறிவிப்பு விடுதல்

இருவரில் எவரேனும் மற்றொருவருக்கு அறிவிப்பு கொடுத்து உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

5 ஒருவர் மறுத்ததை மற்றவர் ஏற்றுக் கொள்ளுதல்

உடன்படிக்கை எட்டியுள்ள இருவரில் ஒருவர் உடன்படிக்கையில் கண்டுள்ள வாறு நடக்க மறுத்தாலோ அல்லது எதாவது நிபந்தனையை மீறுவதன் மூலம் அந்த உடன்படிக்கையில் தொடர விருப்பமில்லாமல் இருந்து அதனை மற்றவரும் ஏற்றுக் கொண்டால் அந்த உடன் படிக்கை முடிவு கட்டப்படலாம்.

6 விடுவித்தல்

உடன்படிக்கையின் இருவரில் ஒருவர் மற்றொருவரை உடன் படிக்கையில் கண்டுள்ளவாறு நடப்பதிலிருந்து விடுவித்து விட்டால் உடன்படிக்கை முடிவுக்கு வந்து விடும்.

7 காலக்கழிவு

தவணை முறையில் எடுத்தவரை அப்பொருளை வாங்கிக் கொள்கிறாரா என்று கூற காலம் கொடுத்தும் அவர் முடிவு ஏதும் கூறாதிருந்தால் உடன்படிக்கை முடிவுக்கு வந்து விடும்.

குறிப்பு : சட்டம் பற்றி அறியாத சாதாரண மக்கள் வரையறுக்கப்பட்ட தவணை முறை விற்பனை பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. இதனை உதாரணமாகக் காட்டி சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க இயலாது. மேற் கொண்டு விபரங்கள் தேவைப்படுபவர்கள் சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஏசிசிக்ளோபல்.காம், இஃபினான்ஸ் மேனேஜ்மெண்ட்.காம், விக்கிபீடியா ஹெல்ப்லைன்லா.காம் மற்றும் லீகல் இந்தியா.காம் போன்ற இணைய தளங்களிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

---

## பயனுள்ள கோடை விடுமுறை

சுட்டெரிக்கும் வெளிலில் கோடை விடுமுறை தொடங்கிவிட்டது. வசதி வாய்ப்பு இருப்பவர்கள் வெயிலின் கொடுமை தெரியாமல் இருப்பதற்காக ஊட்டி, கொடைக்கானல், உள்ளிட்ட இடங்களுக்கும், அதிக வசதி உள்ளவர்கள் வெளி மாநில மற்றும் வெளிநாடுகளில் உள்ள கோடை வாசஸ்தலங்களுக்கும் செல்வார்கள்.

ஆனால் எல்லோராலும் ஊர் சுற்ற முடிவதில்லையே! பொதுவாக கோடை விடுமுறை தொடங்கிவிட்டாலே, குழந்தைகள் உள்ள வீடுகளில் இருப்பவர்களுக்குப் பெரிய பிரச்சனைதான். சுமார் 2 மாதங்களுக்கு குழந்தைகளை எங்கே விடுவது என்ற பிரச்சனையில் விடுமுறைக் கால வகுப்புகளுக்கு அனுப்புகின்றனர்.

ஆனால் விடுமுறைக் காலத்தைப் பயனுள்ளதாகக் கழிக்க வேறு வழிகளும் உள்ளன. ஒவ்வொரு நாளும், வங்கி, அஞ்சலகம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று, அங்கு நம்முடைய பணிக்கு இடையிலேயே, நம் குழந்தைகளுக்கும் அந்த அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் செயல்பாடு குறித்து கற்றுத் தரலாம். இதன் மூலம், அஞ்சல் வழி தகவல் தொடர்பு, சேமிப்பின் அவசியத்தை சிறார்கள் உணர்ந்து கொள்வார்கள். அவர்களை கடைகளுக்கு

அழைத்துச் சென்று பொருள்களை வாங்கப் பழக்க வேண்டும்.

என்னதான் படிப்பிலும், பிற பழக்க வழக்கங்களிலும் நன்கு செயல்பட்டாலும் நமது உடலைப் பேணிக் காக்காவிட்டால் பயனில்லை. கோடை விடுமுறையில் ஏதாவது ஒரு விளையாட்டை முழுமையாகக் கற்றுத் தர முயற்சிக்கலாம். அதைத் தொடர்ந்து விளையாடினால், அதில் ஏற்றம் பெற்று விளையாட்டையே வாழ்க்கையாகக் கொள்ள வாய்ப்புள்ளது. கற்றுக்கொள்ளும் விளையாட்டில் உச்சம் பெற முடியாவிட்டாலும் நமது உடல் நலத்திற்காகவும், பொழுது போக்குக்காகவும் வைத்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு நகரங்களில் வசிப்போரில் பெரும்பாலானவர்கள் மிக இளம் வயதில் வாகனம் ஓட்டத் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். ஆனால் பெரும்பாலானோருக்கு நீச்சல் தெரியாது. கோடை விடுமுறையில் பிள்ளைகளை நீச்சல் வகுப்பில் சேர்த்து, நீந்தப் பயிற்சி பெறச் செய்யலாம், நீச்சல் என்பது உயிர் காக்கும் பயிற்சி, அதைப் பயின்று விட்டால் ஆயுள்காலம் முழுவதும் மறவாது. சதுரங்கம், பாட்மிண்டன் போன்ற பிற விளையாட்டுகளுக்கும் கோடைப் பயிற்சி முகாம்கள் இருந்தால் அதில் சேர்க்கலாம். ஓவியம் பயிற்றுவிக்கலாம்.

இன்று எல்லாம் கணினிமயம் தான். எனவே, பள்ளியில் கணினியில் நேரடி பரிச்சயம் இல்லாத சிறார்களுக்கு கணினியின் அடிப்படைப் பயிற்சியைக் கற்றுத் தர ஏற்பாடு செய்யலாம். இப்போதைய நடைமுறைச் சூழ்நிலையில் ஆங்கிலம் இல்லாமல் எதுவும் இல்லை என்றாகிவிட்டது. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் பயிற்சி அளிக்கும் வகுப்பில் சேரலாம்.

உலகம் உள்ளங்கை அளவில் சுருங்கிவிட்டது. இச்சூழலில் ஹிந்தி மட்டுமல்லாமல், ஜெர்மன், பிரெஞ்ச், சீன மொழிகளில் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்வது ஒவ்வொருவருக்கும் கூடுதல் பலம் சேர்க்கும். இவ்வாறு பிற மொழிகளைத் தெரிந்து கொள்வது வேலை வாய்ப்பினை எதிர்நோக்கும் போது கூடுதல் தகுதியைத் தரும்.

– தொடரும்

அர்ச்சனா சுவேதாரண்யம்,

சென்னை–90.


**நகர கார்காத்த வேளாளர் சங்கம்**
**சீர்காழி**
பதிவு எண்.102/2019

**21-வது மங்கல சந்திப்பு**

அன்புடையீர்! வணக்கம்.

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **21-வது** மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **15.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை** சீர்காழி, தேர்வடக்கு வீதி **சங்க கட்டிடம் (சி.எம்.டிரஸ்ட்)** தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்குபெற விரும்புபவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ.600/-ஐ** விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **30.05.2025க்குள்** அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara Karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்
**கி.ஜெயச்சந்திரன் பிள்ளை,** தலைவர் 63697 29337
**சி.அகோரம்பிள்ளை,** செயலாளர் 94861 94225
**சே.ரவிச்சந்திரன்,** பொருளாளர் 97903 19517
**இராம.முரளி பிள்ளை,** நிறுவனர். சி.எம்.டிரஸ்ட். 94420 85841

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**திரு.கல்.சுகுந்தவனநாதன்**
11, தியாகராஜ நகர்,
சீர்காழி - 609110.
செல்: 94420 83310, 86108 78905

**திரு.S.பிரகாசம்,** M.Com.,
5, R.N.காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு,
கொள்ளிடம் - 609102. சீர்காழி தாலுக்கா
**for GPay** செல் : 7395865318

**தொடர்புக்கான நேரம்: காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**

## மகத்தான வாழ்வை அருளும் மகாகும்பமேளா

உத்தரபிரதேசத்தில் உள்ள பிரியாக்ராஜில் தொடங்கிய இந்த ஆண்டின் பிரசித்தமான கும்பமேளா கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வந்தது. மகாகும்பமேளா உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் பௌஷ பௌர்ணமியையொட்டி திங்கள்கிழமை ஜனவரி மாதம் 13–ம் தேதி தொடங்கியது. மகா சிவராத்திரி திருநாளான பிப்ரவரி 26–ம் தேதி வரை 45 நாட்களுக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.

சராசரியாக ஒரு நாளைக்கு 80 லட்சம் பேர் முதல் 2 கோடி பேர் வரை திரிவேணி சங்கமத்தில் நீராடினர். தங்கள் ஆன்மீக வாழ்வின் பெரும் பயனாக கும்பமேளாவில் கலந்து கொள்வதையும், திரிவேணி சங்கமத்தில் நீராடுவதையும் நினைப்பதால் நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாகிக்கொண்டே இருந்தது. பிரயாக்ராஜுக்கு வரும் பிரதான சாலைகளில் எல்லாம் வாகனங்கள் பல கிலோமீட்டர் தூரத்திற்கு அணிவகுத்துநிற்கின்றகாட்சிகளைநாம்தினந்தோறும் செய்தித்தாள்களில் பார்த்துக்கொண்டிருந்தோம்.

உலகின் மிகப்பெரிய ஆன்மீக சங்கமமான மகா கும்பமேளாவின் முதல் 6 நாட்களில் 7 கோடிக்கும் அதிகமான பக்தர்கள், மடாதிபதிகள், இந்தியாவின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் என்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

**கும்பமேளா என்றால் என்ன?**

கும்பமேளா ஒவ்வொரு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு இடங்களில் கொண்டாடப்படும் திருவிழா ஆகும். இந்தியாவின் அலகாபாத், ஹரித்வார், உச்சைன் (உஜ்ஜயின்) மற்றும் நாசிக் ஆகிய நான்கு ஊர்களில் உள்ள ஆற்றுப்படுகையில் இவ்விழா நடைபெறும்.

திரிவேணி சங்கமம் என்பது கங்கை, யமுனை, ஆறுகளும் கண்ணுக்குப்புலப்படாத சரசுவதி ஆறும் கூடும் இடமாகும். இந்த மூன்று ஆறுகளின் கூடல் அலகாபாத்தில் (பிரயாக்ராஜ்) நடைபெறுகிறது.

ஏன் 12 ஆண்டுகள் என்ற கணக்கையும் பார்க்க வேண்டும். புராணங்களில் 12 என்ற எண்ணுக்கு மகத்துவம் உண்டு. நமக்கு ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள். நமக்கு 12 ஆண்டுகள் என்பது தேவர்கள் கணக்கில் 12 நாள், இந்த அடிப்படையில் தான் கும்பமேளா நடைபெறுகிறது என்றாலும் தற்போது நடைபெறுவது இன்னும் சிறப்பு. கும்பமேளா குறித்து நாரதர் புராணம் முதலிய புராணங்களில் குறிப்புகள் உள்ளன. வெளிநாட்டு சீன யாத்திரிகர் யுவான்சுவாங் தன்னுடைய குறிப்புகளில் இந்த விழாவைப் பற்றி சொல்லி இருக்கின்றார். தேவர் உலகத்தில் உள்ள தேவர்களும் தங்கள் புனித கடமையை ஆற்றவும், புனித நீராடவும் பாரத தேசத்திற்கு வந்து கும்பமேளாவில் கலந்து கொள்கின்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் நடைபெறும் கும்பமேளா முழு (பூர்ண) கும்பமேளா எனப்படும். மற்ற இடங்களில் நடைபெறும் கும்பமேளாவை விட இது புகழ்பெற்றது. பன்னிரெண்டாவது முழு (பூர்ண) கும்பமேளா அதாவது 144 (12x12) ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் கும்பமேளா மகா கும்பமேளா எனப்படும். மகா கும்பமேளாவே உலகில் அதிக அளவு மக்கள் ஒன்று கூடும் திருவிழாவாகும்.

வேதநம்பிக்கைகளின்படி, சாகாவரம்தரக்கூடிய அம்ருதம் என்ற பானத்தின் துளிகள் வானில் கருடன் சுமந்து சென்ற பானையிலிருந்து (கும்பம்) இந்த நான்கு இடங்களில் விழுந்தன என்று புராணங்களில் இருக்கிறது. இதனால் அவ்விடங்களில் கும்பமேளா நேரத்தில் நீராடுவது தங்கள் அக புற அழுக்குகளை நீக்கும் என்றும் நம்புகிறார்கள்.

கும்பமேளாத்திருவிழாபிரயாக்கில்(அலகாபாத்) மகர மாதத்தில் நடைபெறுகின்றது. அதாவது (ஜனவரி/ பிப்ரவரி) பலர் அமாவாசை நாளில் நீராடுவது மிகுந்த பலனை அளிப்பதாக நம்பிக்கையுடன் உள்ளார்கள். வியாழன் கோள் ரிஷப ராசியில் உள்ளபோது சூரியனும் சந்திரனும் மகர ராசியில் இருக்கின்றன. இவ்வமைப்பே அமாவாசை நாளாகும்.

ஹரித்வாரில் பால்குன் மற்றும் சைத்ரா ஆகிய மாதங்களில் (பிப்ரவரி/மார்ச்/ஏப்ரல்) சூரியன் மேஷ ராசியில் செல்லும்போது சந்திரன் தனுசு ராசியிலும் வியாழன் கும்ப ராசியிலும் உள்ள போது கும்பமேளா நடைபெறுகிறது.

உஜ்ஜயின் பகுதியில் இவ்விழா வைகாசி மாதத்தில் அதாவது மே மாதத்தில் சூரியனையும் சந்திரனையும் தவிர மற்றைய கோள்கள் துலா ராசியில் உள்ளபோது சூரியனும், சந்திரனும் மேஷ ராசியிலும், வியாழன் கோள் சிம்ம ராசியிலும் இருக்கும்.

– தொடரும்

B Fair
Salon & Makeover Studio

# B' the new you

A Luxury Salon experience awaits you

**Services: Hair | Skin | Nails | Makeover**



## Bridal & Groom Makeup



**Attractive Bridal Packages**

**BOBBY ANAND MUA**

**Our other Signature services:**

- Keratin - Hair Treatment
- Korean Hair Spa
- Hydra Facial
- Nail Art

Attractive Offers !!!

- Combo Packages for Men & Women Services
- Happy Hours: 10% Off (Monday to Friday 11.00 am to 02.00 pm)

B'Fair Unisex Salon,
@Madipakkam:
Unisex Salon
9176 777 989

Follow Us
@BFAIR_SALON

B Fair Ladies Beauty Parlour,
@Vadapalani:
Ladies Beauty Parlour
9176 777 755

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி S. கிருத்திகா** |
| படிப்பு | M.Sc. (Phy)., B.Ed., |
| வேலை | தனியார் பள்ளி ஆசிரியர், |
| | PGT தனியார் பள்ளி, சென்னை |
| பிறந்த தேதி | 30.12.1998 |
| உயரம் | 160 cm |
| நட்சத்திரம் | கிருத்திகை |
| கோத்திரம் | இறையுட |
| பூர்வீகம் | ஈசனூர், கடலூர் மாவட்டம் |
| தகப்பனார் | **T. சிவக்குமார்,** SFM., |
| | NLC India Ltd., Neyveli T.S., |
| தாயார் | **S. ஜெயசித்ரா** (கோட்டகம்) |
| | இல்லத்தரசி |
| முகவரி | C-19, சுரங்கம் சாலை, |
| | வட்டம் 24, நெய்வேலி நகரம் |
| | Cell : 97129 91263, 94864 56916 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி S. சாய்ஸ்ரீ** |
| படிப்பு | B.Com., M.B.A., |
| பிறந்த தேதி | 11.07.1999 |
| உயரம் | 5' |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் |
| கோத்திரம் | குலவுடையான் |
| பூர்வீகம் | மயிலாடுதுறை |
| தகப்பனார் | **S. சண்முகம்** |
| தாயார் | **S. குமுதா** (கும்பகோணம்) |
| முகவரி | Plot No. 543, Door No. F1, |
| | Temple Tree Apartment, |
| | 21st East Street, |
| | Kamarajar Nagar, |
| | Thiruvanmiyur, |
| | Chennai - 600 041. |
| | Cell : 98410 77255 / 90800 37843 |
| | E-mail : challengerrealty@gmail.com |
| விருப்பம் | Equally or more qualified suitable alliance |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி ச. மதிவதனி** |
| படிப்பு | B.Tech (IT) - Sastra University, Thanjavur |
| வேலை | Assistant Consultant - TCS, Chennai |
| | Rs. 9 Lakhs / PA |
| பிறந்த தேதி | 14.11.1994 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | ரேவதி |
| கோத்திரம் | வில்வதறிய |
| பூர்வீகம் | காட்டுமன்னார்கோயில் |
| தகப்பனார் | **சோ. சந்திரசேகரன்,** |
| | (Rtd. Manager Canteen NLCIL) |
| தாயார் | **ம. சேதுமணி** (திருச்சி) |
| | (Principal, Jawahar Hr. Sec. School (CBSE)) |
| முகவரி | D32, ஜாகீர் உசேன் சாலை, வட்டம் 9, |
| | நெய்வேலலி டவுன் ஷிப், கடலூர் |
| | Cell : 94436 66207, 94427 26543 |
| விருப்பம் | சமபடிப்பு, IT சார்ந்த வேலை. |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் சிபி இளங்கோவன்** |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Lead Software Engineering, Fidelity Investments, Rs. 25 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.04.1998 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | சதயம் |
| கோத்திரம் | கொங்கராய |
| பூர்வீகம் | கன்னியாகுடி, மயிலாடுதுறை |
| தகப்பனார் | **இளங்கோவன் சிவபுண்ணியம்,** M.Sc. (Ag.) கரும்பு அலுவலர், சர்க்கரை ஆலை (பணி ஓய்வு) |
| தாயார் | **S. நிர்மலா** என்கிற **மங்கையர்க்கரசி,** M.A., காட்டுமன்னார் கோயில், சிதம்பரம் |
| முகவரி | 8, சி.கே.எஸ் நகர் விரிவாக்கம், வள்ளாலகரம், பூம்புகார் சாலை, மயிலாடுதுறை - 609 001. Cell : 97915 90912, 90033 57544 E-mail : sivaelangovan@gmail.com |
| விருப்பம் | B.E. அல்லது சம படிப்புடன் சென்னையில் பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி சு. ஹரித்ரா** |
| படிப்பு | MBBS., P.G, General Surgeon |
| வேலை | Post Graduate Residency |
| பிறந்த தேதி | 17.11.1996 |
| உயரம் | 154 cm |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | கனகராய |
| பூர்வீகம் | பிள்ளையார்தாங்கல் |
| தகப்பனார் | **G. சுந்தரராஜன்** செய்தியாளர் |
| தாயார் | **G. சுந்தரி** (சி.சாத்தமங்கலம்) PG Assistant, Govt. School |
| முகவரி | பிரபு குடியிருப்பு, 96, தெற்கு ரத வீதி, சிதம்பரம் - 608 001. Mob : 97895 42999 E-mail : srsundarcdm@gmail.com |




| | |
|---|---|
| பெயர் | **செல்வி எம். சுபஸ்ரீ** |
| படிப்பு | B.Tech., (CS) |
| பிறந்த தேதி | 30.03.2003 |
| உயரம் | 160 cm |
| நட்சத்திரம் | சதயம் |
| கோத்திரம் | நெய்புடையான் |
| பூர்வீகம் | அம்பிகாபுரம், கோடாலிக்கருப்பூர் வழி, ஜெயங்கொண்டம் |
| தகப்பனார் | **Dr. S. மோகன்,** M.Com., M.B.A., Ph.D., முதல்வர், எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள் |
| தாயார் | **T. கலைச்செல்வி,** M.Sc., B.Ed., (பூர்வீகம் - நெடுங்காடு, காரைக்கால்) |
| முகவரி | "சப்தகிரி", 22, நூர் நகர், பிடாரிகுளம் ரோடு, கும்பகோணம் - 612 001. Mob : 94435 64662, 63809 28662 E-mail : mohanskss64@gmail.com |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் P. சரவணன் |
| படிப்பு | B.E., M.S. P.M.P. Master of Science (MS, USA) |
| | Project Management Professional (PMP) |
| வேலை | Self Employed (Civil Engg. & Architect) |
| | Rs. 6.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 06.12.1991 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | இராதாநல்லூர், பூம்புகார் |
| தகப்பனார் | M. பாரி, B.Sc., B.L. (வழக்கறிஞர்) |
| தாயார் | S. சுடர்விழி, M.B.B.S. (Retd. Doctor) |
| | (மேலையூர், பூம்புகார்) |
| முகவரி | குளத்துமேட்டுத் தெரு, நன்னிலம் |
| | Cell : 94439 73313, 94435 27053 |
| | 94441 30274, 70105 61293 |
| விருப்பம் | Any Graduate working Professional at Chennai |




| | |
|---|---|
| பெயர் | செல்வன் Dr. S. சந்தீப் |
| படிப்பு | M.B.B.S., M.S., FIAGES., (General Surgery) |
| வேலை | Asst. Prof. Sri Balaji Medical College, Chennai |
| | Visiting Surgeon Vanaja Hospital, Kilpauk |
| | Murugan Hospital Chennai, Pvt. Clinic, W. Mambalam |
| பிறந்த தேதி | 12.12.1994 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | ரேவதி |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | வரகடை |
| தகப்பனார் | S. செல்வமுத்துக்குமரன் (Flat Promoters) |
| தாயார் | S. நீலா |
| முகவரி | நிரஞ்சனி வில்லா, |
| | 4/26, பாரதி தெரு, மேற்கு மாம்பலம், |
| | சென்னை - 600 033. |
| | Cell : 98410 39515, 99650 45888 |
| | 98845 73641, 94867 18234 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. கௌசிக்** |
| படிப்பு | B.Tech, MBA |
| வேலை | Sr. Project Engineer, Qatar |
| பிறந்த தேதி | 21.05.1995 |
| உயரம் | 181 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | மழவராயநல்லூர் - சிதம்பரம் |
| தகப்பனார் | **V. சங்கர்,** தலைமை மருந்தாளுநர் |
| தாயார் | **S. வித்யா,** (பாலாகுடி) இல்லத்தரசி |
| முகவரி | 53, தேவதாஸ் நகர், விபீஷணபுரம், சிதம்பரம் - 608 001. Cell : 94862 23517, 70100 41488 |
| விருப்பம் | சமபடிப்புடன் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. விஸ்வநாதன்** |
| படிப்பு | B.E. (Mechanical Engineering) |
| வேலை | Incharge in Qualtiy Dept. ரமணா இன்ஜினியரிங், திருச்சி Rs. 4,50,000/PA |
| பிறந்த தேதி | 29.07.1989 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் |
| கோத்திரம் | கீரனுட |
| பூர்வீகம் | வாட்டார் (மன்னார்குடி) |
| தகப்பனார் | **வி. சண்முகம்,** விவசாயம் |
| தாயார் | **ச. ராதா,** இல்லத்தரசி |
| முகவரி | குமரன் நகர், மேல்கல்கண்டார் கோட்டை, திருச்சி - 620 011. Cell : 97862 58071, 96551 83991 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் R. சரவணன்** |
| படிப்பு | B.Tech. (Mechanical) |
| வேலை | நகராட்சி சிவில் காண்டிராக்டர் Rs. 2 Lakhs/PM |
| பிறந்த தேதி | 05.05.1995 |
| உயரம் | 5' - 9" |
| நட்சத்திரம் | புணர்பூசம் |
| கோத்திரம் | பருவுட |
| பூர்வீகம் | ஜெயங்கொண்டம் |
| தகப்பனார் | **S. ராஜமாணிக்கம் பிள்ளை** நகராட்சி தி.மு.க. கவுன்சிலர் காண்டிராக்டர் |
| தாயார் | **R. கஸ்தூரி** (லேட்), ஜெயங்கொண்டம் |
| முகவரி | 11, சன்னதி தெரு, ஜெயங்கொண்டம் - 621 802. அரியலூர் மாவட்டம். Cell : 97503 93533, 97503 93544, 99421 91031 (Whatsapp) |
| விருப்பம் | ஏற்ற வரன் |
| குறிப்பு | ராகு கேது தோஷம் உள்ளது |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் தரணி குமார் ஆர் ஏ** |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Lead Software Engineer, Freshworks, Chennai Rs. 35 Lakhs/PA |
| பிறந்த தேதி | 19.11.1996 |
| உயரம் | 6' - 2" |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | பருவுட |
| பூர்வீகம் | திருப்பங்கூர் |
| தகப்பனார் | **அன்பழகன் எஸ்,** (ஓய்வு) இரயில்வே |
| தாயார் | **இந்துமதி ஏ.** (மோட்டத்தூர்) |
| முகவரி | 46A, விநாயகா காலனி, திருவிழந்தூர், மயிலாடுதுறை Cell : 99425 22345 / 96593 31212 / 93459 76887 |



# மணமகள் தேவை

**பெயர்** செல்வன் R. ரகுராமன்
**படிப்பு** B.E.,
**வேலை** Cognizant Technology Solutions
Halifax, Canada



**பிறந்த தேதி** 10.06.1995
**உயரம்** 168 cm
**நட்சத்திரம்** சுவாதி
**கோத்திரம்** பாரங்குச
**பூர்வீகம்** சிதம்பரம்
**தகப்பனார்** ரவிச்சந்திரன் R., B.A.,
LIC Agent
**தாயார்** மாலதி R., B.Com., (சிதம்பரம்)
Superindent
Ragavendra Arts & Science College
**முகவரி** 29/48, பதினாறுகால் மண்டபத் தெரு,
சிதம்பரம் - 608 001.
Cell : 99427 20466 / 87547 18640
E-mail : ravicdm17@gmail.com
**விருப்பம்** நல்ல குடும்ப பின்னணி, நல்ல குணமான, பணியில் உள்ள மணமகள் தேவை

---

**பெயர்** செல்வன் கா. வருண் நேரு
**படிப்பு** B.Tech (IT)
**வேலை** Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 14.5 Lakhs / PA



**பிறந்த தேதி** 22.11.1986
**உயரம்** 166 cm
**நட்சத்திரம்** பூசம்
**கோத்திரம்** எரவுட
**பூர்வீகம்** இறையூர் (பெண்ணாடம்)
**தகப்பனார்** மு. கார்த்திகேயன்
**தாயார்** கா. தனலட்சுமி
(செந்துறை)
**முகவரி** 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

---

**பெயர்** செல்வன் M.S. Kabilan
**படிப்பு** B.E., MBA.,
**வேலை** Team Lead - E- Commerce, Chennai
Rs. 6 Lakhs/PA



**பிறந்த தேதி** 29.10.1995
**உயரம்** 180 cm
**நட்சத்திரம்** Pooradam
**கோத்திரம்** Eravuda
**பூர்வீகம்** Perunchery
**தகப்பனார்** V. Sivasubramanian, Consultant
**தாயார்** R. Mullai (Mayiladuthurai)
Govt. School Teacher
**முகவரி** Plot No. 11, 11th Street, 6th Cross,
Thendral Nagar East,
Thirumullaivoyal, Chennai - 62.
Cell : 97910 79181 / 94445 22460
94863 49064

---

**பெயர்** செல்வன் J. Rishi Kumar
**படிப்பு** B.E., MS -
Production Engineering (Germany)
**வேலை** Quality Specialist at Corning GmBH,
Germany



**பிறந்த தேதி** 13.01.1996
**உயரம்** 172 cm
**நட்சத்திரம்** சித்திரை
**கோத்திரம்** மாங்குட
**பூர்வீகம்** இளந்தோப்பு (மயிலாடுதுறை)
**தகப்பனார்** T. Jayaraman, Retd. Manager,
HCL Technologies
**தாயார்** M. Aruna, (பெண்ணாடம்)
Retd. Postal Employee
**முகவரி** 20, Appar Street,
New Perungalathur,
Chennai - 600 033.
Cell : 98847 32717, 94457 43948
**விருப்பம்** நன்கு படித்த, வேலைக்கு செல்லும் / செல்ல விருப்பமுள்ள, நல்ல குணமுடைய வரன்
Willing to relocate to Germany

# நினைவு அஞ்சலி

**10 ஆம் ஆண்டு** **26 ஆம் ஆண்டு**



திருமதி. M. **கமலா**
க/பெ. இரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
தோற்றம் : 25.07.1946
மறைவு : 16.05.2015

திரு. சேவுட **இரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,**
ஆசிரியர், மூவலூர்
த/பெ. இராசு பிள்ளை
தோற்றம் : 25.12.1941
மறைவு : 27.03.1999

*தங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்த எங்களை தெய்வமாக*
*வானின்று வாழ்த்தி நல்வழி காட்ட வேண்டுகிறோம்.*
*என்றும் உங்களின் நினைவோடு வாழும்*

**R. சிவகுமார்**
Senior Planner, CMDA
**M.S. மஞ்சுளா,** P.G. Teacher, Chennai
அண்ணா நகர் மேற்கு, விரிவு, சென்னை - 101.
94440 55256, 94440 55206

**K. விக்னேஷ்,** B.E., M.B.A.,
**S. மகாலக்ஷ்மி,** B.Tech.,
அண்ணா நகர் மேற்கு, விரிவு, சென்னை - 101.
95245 08085, 94450 63001
**R.S. பாலாஜி,** B.Tech., (Mech.) IIT Madras
Bangalore - 37

No. 2–2, சிவன் தெற்கு ரத வீதி, மூவலூர்,
மயிலாடுதுறை – 609 806.

# நினைவு அஞ்சலி

**2 ஆம் ஆண்டு**



திரு. திட்டதுட **K.S. இராமசாமி பிள்ளை**
(BDO Retd.) குணமங்கலம்
தோற்றம் : 15–01–1937
மறைவு : 15–06–2023

**6 ஆம் ஆண்டு**



திருமதி **R. சரஸ்வதி அம்மாள்**
தோற்றம் : 01.10.1942
மறைவு : 15.05.2019

நாங்கள் அன்புடன் நினைவு கூர்ந்து உள்ளத்தால் வழிபடுகிறோம். வான்நின்று வாழ்த்தி எங்களுக்கு நல் வழி காட்ட வேண்டுகிறோம்.

**மகன்**
**R. பாஸ்கர்**
Head Master
Govt. Hr. Sec. School, Komal

**மருமகள்**
**C. கலைசெல்வி**
மயிலாடுதுறை
98650 65642, 95971 97980

**மகன்**
**R. சிவகுமார்**
Senior Planner, CMDA

**மருமகள்**
**M.S. மஞ்சுளா**
PG Teacher, Chennai
94440 55256, 94440 55206
அண்ணா நகர் மேற்கு விரிவு,
சென்னை - 101.

**பேரன், பேத்தி**

**K.B. கார்த்திக் ராஜா,** B.E., M.S.,
**V. ஸ்வேதா,** B.E.,
Toronto, Canada

**K. விக்னேஷ்,** B.E., MBA,
**S. மகாலக்ஷ்மி,** B.Tech.,
சென்னை - 101.
95245 08085, 94450 63001

**R.S. பாலாஜி,** B.Tech., (Mech.) IIT Madras
Bangalore - 37



தோற்றம்
**09.07.1955**

மறைவு:
**22.03.2025**

# தெய்வத்திரு. R.குமார், M.E.,

த/பெ. தெய்வத்திரு. N.இராமதாஸ், கருவாழக்கரை, மேலையூர்

அன்பின் திருஉருவாய், அடக்கத்தின் மரு உருவாய்
இராமதாஸ் கோமதி அவர்களின் இனிய இளையமகனே
கட்டிட கலையில் முதுகலை பட்டம் பெற்றவரே
தான்கற்றதை செயலாக்கி சிறப்பு அடைந்தவரே
கண்ணான கலாவை கரம் பிடித்தவரே
கண் மணிகளாக இரு குமாரத்திகளை வளர்த்தவரே
கடமையில் சிறந்த மருமகன்களை மகன்களாக கருதியவரே
பாசமிகு அண்ணன் நேசமிகு அக்கா ஆகியோரை அரவணைத்தவரே
சமூக சேவையில் தன்னிகரற்று விளக்கியவரே
அறிவு கடலை ஏந்திநிற்கும் அமைதியான குழந்தைகளின்
எதிர்கால உலகை மாற்றி அமைக்க மாண்டிச்சேரி
கல்வி முறையை வழியெடுத்து 'நவதிஷா பள்ளியின்' நாயகராய் விளங்கியவரே
நீங்கள் எப்போதும் எங்களுடன் நாங்கள் எப்போதும் உங்களுடன்
நீங்கள் எங்களை வானின்று வாழ்த்த வேண்டுகிறோம்.

இவண்

மனைவி. **G.மணிமேகலை குமார்,** M.A., M.Com.,

மகள்கள்
**பிரியங்கா குமார்,** B.A.,
**சஹானா குமார்,** M.Sc.,

மருமகன்கள்
**S.சிவசுப்பிரமணியம்,** M.S.,
**V.விக்னேஷ்வர்,** B.E.,

மழலை : **S.அலை**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
04-01-1940



மறைவு:
07-04-2025

## மும்பை திரு. இராமதாஸ்

ஓர் சிறந்த இல்லத்தலைவனாக, தந்தையாக, பலருக்கும் உற்ற நண்பனாக, வழிகாட்டியாக, இலக்கியவாதியாக விளங்கியவர். மும்பை தமிழ்ச்சங்கத்தின் தலைவராகவும், மும்பை கார்காத்தார் சங்கத்தின் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈடு செய்ய இயலாத இழப்பில், அவரது நினைவுகளை நெஞ்சில் தாங்கி, அவர் வழியில் என்றென்றும் நாங்கள்

மனைவி: **தமயந்தி**

மகன்கள்
**இராஜேஷ்கண்ணன்**
**இராஜசேகர்**
**இராஜசீலன்**
**இராஜேந்திரன்**

மருமகள்கள்
**கவிதா**
**வீணா**
**கிருத்திகா**
**மகாலட்சுமி**

பேரக்குழந்தைகள்:
**அக்ஷரா ராஜேஷ், அந்த்ரா ராஜேஷ்,**
**அனுஷ்கா சேகர், ஆரவ் இராஜசீலன்**
**ஆருஷி இராஜேந்திரன்**

# நூற்றாண்டு நினைவஞ்சலி



**R. தையல்நாயகி**
சங்கீதபூஷணம் (வீணை)
பூர்வீகம் – கண்ணங்குடி
1931 – 1986

**S. இராமஸ்வாமி பிள்ளை**
Co-opeartive Sub Registror
பூர்வீகம் – சிறுவரப்பூர்
1925 – 1967

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
அஞ்சலி செலுத்துகிறோம் அன்புடன்!!

R. கௌசல்யா
S. அசோகன்

பிரியதர்ஷினி US
விஜய் US
ப்ரித்வி விஜய் US
அபிநயா
சாய்சைலேஷ்

R. சிற்றம்பலம்
C. ஓம் சக்தி

அஷ்வினி US
சஞ்ஜய் US
ஐஷா சஞ்ஜய் US
பிரஷாந்த் US
ப்ரீத்தி US
சென்னை.

R. ஜோதீஸ்வரி
R. சந்திரசேகரன்

இரத்னவிஷால்
லக்ஷ்மிப்ரியா

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர்: கௌரி, சித்ரா, பிரியா, ஆண்டாள், மீரா, தீபிகா, வசுமதி, மீனா.**

**இடம்: மடிப்பாக்கம், கௌரியின் வீடு.**

கௌரி வீட்டில் தோழிகள் மாலை 4 மணி அளவில் குழும, குளிர்பானத்துடன் வரவேற்கப்படுகின்றனர்.

கௌரி : வாங்க! வாங்க! உட்காருங்க! ஒரு 5 நிமிடம் ஆசுவாசப்படுத்திட்டு, நமது கச்சேரியை ஆரம்பிக்கலாம்.

மீனா : ஆண்டாளக்கா! வைகாசி மாத விசேஷம் கூறுங்கள்.

ஆண்டாள் : இம்மாதத்தில் முருகப்பெருமானின் அவதாரதினமானவைகாசிவிசாகம்,மோகினிஏகாதசி, நரசிம்ம ஜெயந்தி போன்ற இந்து மத பண்டிகைகளும், புத்த பூர்ணிமாவும் கொண்டாடப்படுகின்றன. வைகாசியில் சூரியன் மேஷத்திலிருந்து ரிஷபத்துக்குச் செல்கிறார்.

மீரா : வைகாசி மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசிக்கு 'மோகினி ஏகாதசி' என்று பெயர். இன்று விரதமிருந்து பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் பாவங்கள் அனைத்தும் விலகும் என்பது ஐதீகம். நரசிம்ம அவதாரம் எடுத்த தினம் நரசிம்ம ஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது.

ஆண்டாள் : ஆமாம்பா! அது போலவே முருகப் பெருமான் தேவர்கள் துயர் நீங்க அவதரித்த நாள் வைகாசிவிசாகம்.முருகன்கோவில்களில்விசேஷமாக கொண்டாடப்படும். அதுமட்டுமன்றி விசாகமும், பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாள் சில கிராமத்து தேவதைகளுக்கும், சில கோவிலின் அம்பாளுக்கும் விசேஷமான தினமாகும்.

சித்ரா : ஆமாம் அக்கா! எங்கள் அப்பாவின் குலதெய்வமான மாரியம்மனுக்கு அபிஷேக, ஆராதனையுடன் புறப்பாடும் உண்டு.

பிரியா : வைகாசி மாத தேய்பிறை ஏகாதசிக்கு வருதிந் ஏகாதசி எனப் பெயர். சிவபெருமான் பிரம்மனின் தலையைக் கொய்ததால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய நாள் என எங்கள் பாட்டி சொல்ல கேட்டிருக்கிறேன்.

வசுமதி : நாங்கள் விடுமுறைக்கு காஷ்மீர் போக டூர் ஆபரேட்டரிடம் முன்பணம் கட்டி விட்டோம். பகல்காம் பைசரன் பள்ளத்தாக்கில் நடந்த கொடூரத்துக்குப் பிறகு போகும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டோம்.

கௌரி : 25 சுற்றுலாப் பயணிகளையும், ஒரு உள்ளூர் குதிரைக்காரரையும் தீவிரவாதிகள் மனச்சாட்சியே இல்லாமல் சுட்டுக் கொன்றது மிகமிக வேதனை தருகிறது. தேன்நிலவுக்கு வந்தவர்கள், பையன் தேர்வில் முதலிடம் வாங்கியதற்காக சுற்றுலா அழைத்து வந்த தந்தை என எத்தனை பேரை துடிதுடிக்க சாகடித்துள்ளார்கள்.

தீபிகா : உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் உடனே தாக்குதல் நடந்த இடத்துக்குச் சென்று உயர் ராணுவ அதிகாரிகளுடனும், முதன்மந்திரியுடனும் ஆலோசனை நடத்தியதும், நமது பிரதம மந்திரி உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருப்பது மனதுக்கு ஒரு திருப்தியைத் தருகிறது.

சித்ரா : காஷ்மீர் ஒரு புனித பூமி. மகரிஷி காஷ்யப முனிவர் இங்கு தவம் புரிந்துள்ளார். மேலும் கி.மு. 273–ல் தட்சசீலா, நாளந்தா பல்கலைக்கழகங்களுக்கு முன்பே சாரதாக்ஷேத்ரா என்ற பல்கலைக்கழகம் சரஸ்வதி தேவி கோவிலுடன் இருந்துள்ளது. தற்சமயம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் இருக்கும் காஷ்மீரத்தில் இருப்பதால், Teetwal என்ற ஊரில் சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சார்யா விதுசேகர பாரதி சந்நிதானத்தால் 2023ஆம் வருடம் ஜூன் 5ஆம் தேதி புது கோவில் எழுப்பப்பட்டு கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அப்படிப்பட்ட புனித பூமியில் இந்த தாக்குதல் நடந்துள்ளது என்பதை ஜீரணிக்க இயலவில்லை. இனிமேலாவது அமைதி திரும்ப வேண்டுமென அந்த சரஸ்வதி தேவியை வணங்குவோம்.

மீனா : சரி! சரி! Topic மாத்துவோம். மரவள்ளிக் கிழங்கு குறித்து ஒரு குறிப்பு படித்தேன். அதைச் சொல்றேன்பா! இது தென் அமெரிக்காவையும், மேற்கு ஆப்பிரிக்காவையும் தாயகமாகக் கொண்டது. இந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் போர்த்துகீசியரால் அறிமுகப்படுத்தப்பட்டதாம். உலக உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 6%. இதிலிருந்து தயாரிக்கப்படும் Starch எனும் மாவுப்பொருள் பல்வேறு துறைகளில், குறிப்பாக பருத்தி, சணல் ஆடைகள், காகிதம், கெட்டி அட்டைகள் செய்யவும், திரவ குளுக்கோஸ், டெக்ஸ்ட்ரோஸ் உற்பத்திக்கும் உதவுகிறதாம்.

பிரியா : நான் தக்காளி பத்தி சொல்றேன்பா! தக்காளி முதலிய தாவரங்களில் இருக்கும் சேர்மம் லைக்கோபீன் (Lycopene). இது மனித மூளையின் செயல்பாட்டைக் கூர்மையாக்கும் தன்மை உடையது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வசுமதி : உலக வெப்பமயமாதலால் பனிப்பாறைகள் உருகி வருகின்றன. சமீபத்தில் கிரீன்லாந்து நாட்டில் ஒரு பனி ஏரி உருகியதால் 3 லட்சம் கோடி லிட்டர் தண்ணீர் வெளியேறி உள்ளதாம்.

தீபிகா : ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கு அருகே வந்து செல்லும் விண்கல் பென்னு. இங்கிருந்து நாசாவால் கொண்டுவரப்பட்ட மண் மாதிரிகளைச் சோதித்த விஞ்ஞானிகள், இதில் உயிர் உற்பத்திக்குத் தேவையான பாஸ்பேட், க்ளோரைட் உள்ளிட்ட உப்புக்கள், அமினோ அமிலங்கள் இருப்பதாக உறுதி செய்துள்ளனர்.

கௌரி : நானும் படிச்சதை சொல்றேன். தரைவழி, கடல்வழி, வான்வழி போக்குவரத்துக்கு வழிகாட்ட என்.வி.எஸ். 02 செயற்கைக்கோளை இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி. எப்–15 எனும் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியுள்ளதாம்.

மீரா : பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வந்துவிட்டன. இனி கல்லூரி வேட்டைதான். பல புது பிரிவுகள் வந்துள்ளதாக கேள்விப்பட்டேன். அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

சித்ரா : இன்ஜினியரிங் படிப்பில் AI டெக்னாலஜி மிகவும் பிரசித்தமாகி உள்ளது. மேலும் மாணவ, மாணவிகள் விருப்பமாக கம்ப்யூட்டர் சயின்ஸ்/ இன்ஜினியரிங், பயோ மெடிகல், ரோபாட்டிக்ஸ், ஆட்டோமேஷன், என்விரான்மெண்டல், Renewable energy, பயோடெக்னாலஜி, ஏரோஸ்பேஸ் போன்று பல துறைகளில் சேர விருப்பம் கொண்டுள்ளனர். மேலும் Fashion Technology, Food Science, Nutrition போன்ற பல துறைகளும் உள்ளது. Visual Arts-ல் பலரும் விரும்பி சேர்கிறார்கள்.

மீனா : மருத்துவத்துறையில் பல விதமான படிப்புகள் தற்சமயம் பிரபலமாகி, பல கல்லூரிகளில் ஆரம்பித்துள்ளனர். B.Sc.யில் Critical Care Technology, Optometry, Clinical Nutrition, Nuclear Medicine மற்றும் Physician Assistant என பல Courses உள்ளன.

ஆண்டாள் : அமெரிக்காவில் P.A. இப்போது மிகவும் பாப்புலராக உள்ளது என்று என் பேத்தி கூறினாள். மருத்துவப் படிப்பு அநேக வருடங்கள் ஆவதாலும், கடினமாக இருப்பதாலும் பலரும் P.A. படிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்களாம்.

கௌரி : நம் குழந்தைகள் அனைவரும் நன்முறையில் தேர்ச்சி பெற்று, மேற்படிப்பு படிக்க நாம் அனைவரும் வேண்டுவோம். டிபன் கொண்டு வருகிறேன். எல்லோரும் எடுத்துக்கோங்கோ! அடுத்த மாதம் எங்கு meet பண்ணப் போறோம்?

வசுமதி : மயிலாப்பூரில் ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள எங்கள் வீட்டில் சந்திப்போம்.

அனைவரும் கௌரியின் அருமையான முறுக்கு மற்றும் பாதாம் பர்பிக்கும், காபிக்கும் நன்றி கூறி கலைகிறார்கள்.

நன்றி! வணக்கம்!!

## வருந்துகிறோம்

மும்பை கார்காத்தார் சங்கம் மற்றும் மும்பை தமிழ் சங்கத்தின் தலைவருமான திரு. இராமதாஸ் அவர்கள் 7/4/2025 அன்று மும்பையில் இறைவனடி அடைந்தார்கள் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆன்மா சாந்தி அடையவும் இறைவனை இறைஞ்சுகின்றோம். தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பும், கார்காத்தார் ஒப்புரவும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

சிதம்பரம் "சித்தாந்த இரத்தினம்" செம்மங்குடி திரு. கபீர்தாஸ் அவர்கள் 16.4.2025 அன்று ஈசனடி சேர்ந்து அடைந்தார். அவர் கார்காத்தார் ஒப்புரவின் படைப்பாளியாக திகழ்ந்து, சென்னை கார்காத்தார் சங்கத்தின் படைப்பாளிகள் விருதினைப் பெற்றவர். அவரது மறைவுக்கு சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## "சோம்பி இருக்கும் மூளை சாத்தானின் பணிமனை"

### (An idle mind is devil's workshop)

Dr. D. Kalyanakumar, Trichy-18.

"பணம் சம்பாதிப்பவர் ஒரு போதும் சோம்பலாக இருப்பதில்லை. சோம்பலாக இருப்பவர் ஒரு போதும் பணம் பண்ணுவதில்லை." – இது மேலைநாட்டுப் பழமொழி. "சோம்பித் திரிவர், தேம்பித் திரிவார்" – இது நம் ஆன்றோர் வாக்கு. "அந்த மனுஷன் அங்கேயும் இங்கேயும் சுறுசுறுப்பாகத் திரியறான்னா அதுக்கு அவர் உடம்பு இடம் கொடுக்குது." "அந்த அம்மா எல்லா வேலையையும் இழுத்துப் போட்டு செய்யறாங்கன்னா அவங்க உடம்பு ஆரோக்கியமா இருக்கு." இப்படிச் சிலர் பேசுவதைக் கேட்டிருப்பீர்கள். அவர்கள் சுறுசுறுப்பிற்கு முக்கியக் காரணம் உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல, மன ஆரோக்கியம். அதாவது உடல் சுறுசுறுப்பிற்கு மூல காரணம் "மன சுறுசுறுப்பு." மனம் மட்டும் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துவிட்டால் போதும், உடலும் பம்பரமாக இயங்க ஆரம்பித்துவிடும். அழகிய சிற்பமாக வடிவெடுக்க மனம் எனும் உளி கொண்டு உங்களை செதுக்க ஆரம்பித்து விட்டீர்கள் அல்லவா? முக்கியமாக நீங்கள் செதுக்கி நீக்க வேண்டிய கற்கள் என்ன தெரியுமா? "சோம்பல்" ஒருவன் சோம்பலை மட்டும் தன்னிடமிருந்து நீக்கிவிட்டால் போதும், அவனுள் அஷ்டலெக்ஷ்மியும் குடிகொள்ள ஆரம்பிக்கும்.

சுறுசுறுப்புக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் ஆபிரஹாம் லிங்கன் P. ஆபிரஹாம் லிங்கன் அளவிற்கு உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் நாள் முழுவதும் செயல்பட்ட ஜனாதிபதி இல்லை என்று இன்றும் உலகம் பாராட்டுகிறது. "நாள் முழுவதும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்கிறீர்களே! எப்படி?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு லிங்கன் கூறிய பதில் என்ன தெரியுமா? "இதில் எந்த வித ரகசியமும் இல்லை. சுறுசுறுப்பாய் இருக்க நான் ஆசைப்படுகிறேன், சுறுசுறுப்பாக இருக்க முயற்சி எடுக்கிறேன், சுறுசுறுப்பாக இருக்க நான் பாடுபடுகிறேன்" என்றார்.

ஆம்... முதலில் ஆசைப்பட்டு முயற்சி எடுத்துப் பாடுபட்டால், உங்களாலும் நிச்சயமாக சுறுசுறுப்பாக இருக்க முடியும். மனம் பழக்கத்திற்கு அடிமையாகக் கூடியது. எதையும் 23 நாட்கள் விடாமல் பழகினால் அந்தப் பழக்கம் நம் மீது அட்டை போல் ஒட்டிக் கொள்ளும். முயன்று பாருங்கள், வெற்றி நிச்சயம். சுறுசுறுப்பாக இருக்க ஆசைப்படுபவர்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும் உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாய் இருந்தால் மட்டும் போதாது. ஒரு வேலையைத் திறம்பட முடிக்க மூளையை அதாவது அறிவைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும்.

இதற்கு ஒரு சிறு கதை உண்டு. ஒரு அரசாங்கத்தில் அரசர் ஆணைப்படி விறகு வெட்டிகளைக் கொண்டு விறகுகள் வெட்டப்பட்டன. ஒரு நாள் அண்ணன் தம்பி என இரு விறகு வெட்டிகள் விறகு வெட்ட வந்தனர். இருவருமே நல்ல உழைப்பாளிகள். நிறைய விறகுகளை வெட்டிக் குவிக்க வல்லவர்கள். இருவரும் காட்டின் வெவ்வேறு திசைகளுக்கு அனுப்பப்பட்டனர். அண்ணன் எட்டு மணி நேரம் விறகு வெட்டி ஒரு கணிசமான தொகையை ஊதியமாகப் பெற்றான். தம்பி நான்கு மணி நேரம் மட்டுமே விறகு வெட்டி அண்ணனை விட இரண்டு மடங்கு ஊதியம் அதிகமாகக் கிடைக்கப் பெற்றான். அண்ணன் அரசரிடம் "ஐயா, நான் தான் அதிக நேரம் வெட்டினேன், எனக்கு ஊதியம் குறைவாக இருக்கிறதே?" என்று வினவ, அரசரும் "நீயும் நன்றாக உழைத்தாய் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உன் தம்பி புத்திசாலி தனது கோடாரியை கூர்மையாகத் தீட்டிக் குறைந்த நேரத்தில் அதிக மரங்களை வெட்டி விட்டான். உன் கோடாரி மழுங்கலாக இருந்தது. இனிமேலாவது கோடாரி மட்டுமின்றி, எந்த வேலைக்குச் சென்றாலும் புத்தியையும் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு செயல்படு" என்றார். இதிலிருந்து என்ன தெரிகிறது? அறிவுக் கூர்மையுடன் கூடிய சுறுசுறுப்பு அதிக ஆதாயத்தை தேடித் தரும்.

சரி... சுறுசுறுப்பாக இருக்க நீங்கள் செய்ய வேண்டியது என்ன? அதிகாலையில் விழிக்கப் பழகுங்கள். பஞ்ச பூதங்களில் ஒன்றான 'ஓஸோன்' காற்றை எவ்வளவு சுவாசிக்க முடியுமோ, கிரகிக்க முடியுமோ கிரகித்துக் கொள்ளுங்கள். அதிகாலையில் தான் 'ஓஸோன்' காற்றில் அதிக அளவு கலந்திருக்கிறது என்பது நீங்கள் அறிந்ததே. சிறந்த யோகக்கலை நிபுணர்களிடம் யோகக் கலை பயின்று யோகாசனம் செய்யக் கற்றுக்கொள்ளலாம். தினமும் தொடர்ந்து 20 நிமிடங்கள் செய்யப்படும் யோகப்பயிற்சி ஒரு மனிதனை உடலாலும், உள்ளத்தாலும் சக்தி மிகுந்த மனிதனாக்குகிறது.

உள்ளத்தில் சக்தி பீறிட்டு எழ, பிறகு அங்கு சோம்பலுக்கு இடமே இல்லை யோகாசனம் அல்லது உடற்பயிற்சி முடித்த கையோடு காலையிலேயே குளித்து புத்துணர்வு குறையாமல் இருக்கும் வண்ணம் உங்களுக்குப் பிடித்தமான உடையை அணிந்து கொள்ளுங்கள். நன்கு உடையணிந்து ஒப்பனை செய்து கொண்ட பின் யாரும் படுக்கையில் படுத்துத் தூங்குவதில்லை. அடுத்த வேலை என்ன என்பதில் கவனம்செலுத்துங்கள்.கடந்தகாலசோகங்களைஅசை போடாதீர்கள். எதிர்கால பயங்களை நினைத்து அஞ்சி சோர்ந்துவிடாதீர்கள்.இந்தநிகழ்காலம்உங்களுடையது அல்லவா ? அதை நினைத்து சந்தோஷப்படுங்கள். எதையாவது நினைத்து சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருக்காதீர்கள். “ஆயிரம் சிந்தனைகளை விட ஒரு செயல் மேல்” என்பார்கள். சிந்திக்க அதிக நேரம் செலவிட்டு சோம்பலாக அமர்ந்து விடாதீர்கள். “சோம்பி இருக்கும் மூளை சாத்தானின் பணிமனை” என்கிறார் அறிஞர் செஸ்ட்டர் பீல்டு.

ஓய்வு நேரத்தை உங்களுக்கு பிடித்தமான வகையில் செலவிடுங்கள். சிலருக்கு இசை, சிலருக்குப் புத்தகங்கள்,சிலருக்குநண்பர்கள்,சிலருக்குத்தனிமை, இப்படி அவரவர்களுக்கு ரசனைகள் வேறுபடும். இசை, புத்தகங்கள், நண்பர்கள், எதாகட்டும் ‘தரமான....’ என்னும் அடைமொழியை சேர்த்துக்கொள்ளுங்கள். தரம் என்றும் நிரந்தரம் அல்லவா ! ஓய்வு நேரத்தை எவ்வளவுக்கெவ்வளவு இன்பமாகக் கழிக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு வேலை நேரத்தில் உங்கள் திறமையைக் காட்டி உழைக்க முடியும். சுறுசுறுப்பாக இருக்க நினைத்துப் பழகி வாழ்ந்து காட்டுங்கள். உங்களைப் பார்த்து உங்கள் உறவும் நட்பும் தாமாகவே சுறுசுறுப்பைக் கற்றுக் கொள்வார்கள். ‘பெஞ்சமின் பிராங்க்ளின்’ என்னும் அறிஞர் என்ன சொல்கிறார் தெரியுமா ? “எறும்பை விடப் பாடம் கற்றுத் தரும் ஆசான் வேறு யாரும் இல்லை. ஆனால் அந்த எறும்போ தன் வாயைத் திறந்து பேசுவதில்லை.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி ஆண்களைக் காட்டிலும் பெண்கள் சுறுசுறுப்பின்றி இருக்கிறார்கள். மேலும் 168 நாடுகளில் வசிக்கும் மக்களில் நான்கில் ஒரு பகுதி மக்கள் நாள்தோறும் போதுமான உடற்பயிற்சியில் ஈடுபடுவதில்லை. இதனால் இதய நோய், நீரிழிவு நோய், உடல் பருமன், மனநிலை பாதிப்பு போன்ற பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

பரபரப்பு வேறு, சுறுசுறுப்பு வேறு ! பரபரப்பு என்பது ஆபத்தின் அன்னை; சுறுசுறுப்பு என்பது வெற்றியின் செல்லப்பிள்ளை. தொடர்ந்து தோல்வி வந்தால் தோற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள் அல்ல. தோல்வியைத் தாண்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்! உங்களுக்குத் தேவையில்லாதவற்றை நிறுத்துங்கள். உங்களுக்குத் தேவைப்படுவது தானாகவே கிடைக்கும்! நேரமும், நீரோட்டமும் ஒரு போதும் நிற்காது! அதுபோல உழைப்பும், தன்னம்பிக்கையும் ஒரு போதும் தோற்காது !

சுறுசுறுப்பாக இருந்து பாருங்கள், உங்கள் வாழ்க்கை விறுவிறுப்பாகவே இருக்கும்.

## மொட்டை போட்ட உள்ளாங்குருவி

– பராபரன்.

வயல், திடல், காடு, மலை, ஆறு, குளம், அருவி, கடல் என எல்லாம் உள்ள ஊர்தான் உள்ளான் குருவிக்குடிக்காடு. நால்வகைத் திணைகளும் உள்ள அவ்வூரில் மக்கள் நலமோடும் வளமோடும் வாழ்ந்தனர். இயற்கையும் மக்களும் இணைபிரியாமல் உறவாடி வாழ்ந்து வந்தனர். பறவைகளும், கால்நடைகளும் கூட நட்புடன் உறவாடி வாழ்ந்து வந்தன. அத்தகைய சிறப்புடைய அவ்வூரில் ஓர் உள்ளான்குருவி தன் இணையுடன் இனிதே வாழ்ந்து வந்தது.

ஒரு சமயம் ஒரு நாள் உள்ளான் குருவி நீர் பருக ஆற்றிற்குச் சென்றது தன் இணையுடன். எதிர்பாராத விதமாக வந்த புதுவெள்ளச் சூழலில் சிக்குண்ட அவ்வுள்ளான் குருவி ஆற்றில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்டது. இணை உள்ளானால் காப்பாற்ற முடியவில்லை. அலறி அடித்துக் கொண்டது. அழுது விழுந்து புரண்டது. உடல் களைக்கும் வரை ஆற்றில் அங்கும் இங்கும் தேடியது. இனி ஏதும் பயனில்லை என்று எண்ணிய அவ்வுள்ளான் குருவி மனம் நொந்தது. தன் சோகத்தை வெளிப்படுத்த அக்குருவி மொட்டை போட்டுக்கொண்டது. மொட்டைபோட்டுக்கொண்ட அந்த உள்ளான் குருவி கடலோரம் சென்றது. மொட்டைபோட்டுக்கொண்டு வந்த அந்த உள்ளான் குருவியைப் பார்த்த கடல் மனம் திக்கென்றானது. உள்ளான் குருவியைப் பார்த்து “ஏன் உள்ளான் குருவி ! உனக்கு என்ன ஆனது ? ஏன் மொட்டையிட்டுக் கொண்டுள்ளாய் ? என்று கேட்டது. கடலம்மா இப்படிக் கேட்டதும்,

கண்ணீரும் கம்பலையுமாக துக்கம் தொண்டையை அடைக்க விசும்பிக்கொண்டே உள்ளான் குருவி தான் தன் இணையை இழந்த சோகத்தை வெளிப்படுத்தியது.

இதனைக் கேட்ட கடலின் கவலை மலையாக உயர்ந்தது. "அப்படியா? உனக்கு ஏற்பட்ட இந்தத் துயரத்தில் நானும் பங்கு கொள்கிறேன். அதற்காக நான் என்னையே கலக்கிக் கொள்கிறேன் என்றது. அவ்வாறே கடல் நீர் முழுவதும் கலங்கி குழம்பல் நீரானது. அந்நீர் எதிர்த்து ஆற்றின் உள்ளே நுழைந்தது.

அந்த ஆற்றில் நீராட யானை ஒன்று வந்தது. கலங்கிய நீரைப் பார்த்தது? ஏன் இப்படியானாய் என்றது. அதற்கு அந்த ஆறு, "உள்ளான் குருவி மொட்டை போட்டுக் கொண்டதால் கவலை கொண்ட கடல் தன்னைக் கலக்கிக் கொண்டது" என்றது.

இதனைக் கேட்ட யானை "அப்படியா? என் பங்கிற்கு நான் என் கொம்பை ஒடித்துக் கொள்கிறேன் என்று சொல்லி அவ்வாறே தன் கொம்பை ஒடித்துக் கொண்டதாம்.

கொம்பை ஒடித்துக் கொண்ட யானை நிழல் தேடி ஆல மரத்திடம் வந்ததாம். கொம்பொடிந்த யானையைப் பார்த்துத் துணுக்குற்ற ஆல மரம் "ஏ யானையே! உன் அழகான கொம்புக்கு என்னானது என்றது.

உடனே யானை "உள்ளான் குருவி மொட்டை போட்டதால், கடல் தன்னைக் கலக்கிக் கொண்டது. அதனைச் செவியுற்ற யான் எனது கொம்பை ஒடித்துக் கொண்டேன்" என்றது.

இதனைக் கேட்ட உடனே அதிர்ந்த அந்த ஆலமரம் அப்படியாயின் நான் என் இலைகளையெல்லாம் உடனே உதிர்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி அவ்வாறே அதன் அத்தனை தழைகளையும் உதிர்த்துக் கொண்டதாம். அங்கு வந்த கொக்கு ஆல மரத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததாம். என்னவென்று வினவியதாம்.

"உள்ளான் குருவி மொட்டைப் போட்டதாம். கடல் கலக்கிக் கொண்டதாம் யானை கொம்பை ஒடித்துக் கொண்டதாம். அதனால் நான் இலைகளை உதிர்த்துக் கொண்டேன்" என்றதாம் ஆலமரம். வருந்திய கொக்கு தன் பங்காகத் தன் ஒரு கண்ணைக் குத்திக் கொண்டதாம்.

கொக்கைப் பார்த்த உழவன் என்னவென்று விசாரிக்க, கொக்கு உள்ளான் குருவி மொட்டை போட்டதில் தொடங்கி, தன் பங்காகக் கண்ணைக் குத்திக் கொண்டதாகச் சொன்னது. உழவன் உடனே தன் பங்காக ஏரினைத் தாறு மாறாக ஓட்டுவேன் என்று சொல்லி அவ்வாறே ஓட்டினான். உணவு கொண்டு வந்த உழவன் மனைவி உழத்தி தன் பங்காக கஞ்சிக் கலையத்தை கீழே போட்டு உடைத்து விட்டாளாம். இதனைக் கண்டு கேட்ட அவன் மகன் தன் சிலேட்டைப் போட்டு உடைத்துவிட்டான்.

ஏண்டா சிலேட்டை உடைத்தாய் என்ற ஆசிரியரிடம் "உள்ளான் குருவி மொட்டை போட்டதாம்; கடல் கலங்கிப் போச்சாம்; யானை கொம்பை முறித்துக் கொண்டதாம். ஆல் இலைகளை உதிர்த்து விட்டதாம். கொக்கு கண்ணைக் குத்திக் கொண்டதாம். உழவன் ஏரைத் தாறுமாறாக ஓட்டிவிட்டான். உழத்தி–என் அம்மா கஞ்சிக் கலயத்தைப் போட்டு உடைத்துவிட்டாள். அதனால் நான் சிலேட்டைப் போட்டு உடைத்து விட்டேன்" என்றானாம். உடனே ஆசிரியர் கரும்பலகையைப் போட்டு உடைத்து தீ வைத்தாராம். ஓடிவந்த ஊரார் என்னவென்று கேட்க ஆசிரியர் உள்ளான் குருவி மொட்டைபோட்டதிலிருந்து தொடங்கி தான் கரும்பலகையைப் போட்டு உடைத்து தீவைத்துக் கொண்டது வரை விளக்கினாராம். உடனே ஊர் மக்கள் எல்லோரும் மொட்டை போட்டுக் கொண்டார்களாம். தன் பொருட்டு தன் துயரத்தில் ஊரே பங்கு கொண்டது ஆறுதலைத் தந்தாலும், உள்ளான் குருவிக்கு மனம் தாளவில்லை. மலை உச்சிக்குப் போய் அழுததாம். அழுத கண்ணீர் அருவியாய்ப் பெருகி ஆறாய் ஓடி குருவிச் சித்தர் குகைக்குள் புகுந்ததாம். சித்தர் உடனே தன் ஞானதிருஷ்டியால் அனைத்தையும் உணர்ந்தார். அழுது கொண்டிருந்த உள்ளான் குருவியிடம் வந்தார். "நீ அழாதே! உன் இணைக்குருவியை நான் காப்பாற்றி வைத்துள்ளேன். அதற்குக் காய்ச்சல். மருந்து கொடுத்துள்ளேன். வந்து பார் என்று கூறி இரு உள்ளான் குருவிகளையும் இணைத்து வைத்துவிட்டாராம். மகிழ்ந்த அவற்றின் ஆசை என்னவென்று கேட்டாராம் குருவி சித்தர். "கடலும் ஆறும் தெளிய வேண்டும். யானைக் கொம்பு வளர வேண்டும். ஆலமரம் துளிர்க்க வேண்டும். உழத்தி வறுமை நீங்க வேண்டும். அவள் மகனுக்கு சிலேட் வேண்டும். பள்ளிக் கூடத்துக்கு கரும்பலகை ஸ்டேண்டுடன் வேண்டும். ஊர் மக்களின் தலையில்

எல்லாம் உடனே முடி வளர வேண்டும் என்றதாம் மொட்டை போட்ட உள்ளான் குருவி. சிரித்த குருவிச் சித்தர் உன் தலை முடி வளரவேண்டாமா என்றாராம்.'' எனக்கு வேண்டிய என் இணையை உயிருடன் கொடுத்து விட்டீர்களே சாமி! அது போதாதா. என் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்காகத் தான்– அந்த நல்ல உள்ளாங்களுக்காகத் தான் நான் வேண்ட முடியும்'' என்றதாம் குருவி.

''சரி. அப்படியே உன் ஆசை நிறைவேறட்டும்'' என்று வரமளித்தாராம் குருவிச் சித்தர்.

உள்ளான் குருவித் தலையில் முடி முளைக்க! ஆறு கடல் தெளிய, யானைக்குக் கொம்பு முளைக்க, ஆல் துளிர்க்க கொக்குக்குக் கண்விளங்க, உழவன் ஒழுங்காய் உழ, உழத்தியின் வறுமை தீர, மகனுக்கு சிலேட் கிடைக்க, பள்ளிக்கு கரும்பலகைக் கிடைக்க, ஊர் மக்களுக்கெல்லாம் முடி முளைக்க, ஊரே மகிழ்ந்து கொண்டாடியதாம். சித்தரை அவ்வப்பொழுது சென்று உள்ளான் குருவிகள், பார்த்து வந்தன. ஊர் மக்களும் அவ்வாறே.

உங்கள் ஒற்றுமையும், நல்ல உள்ளம் கொண்டமையும், பிற துயரில் பங்கு கொள்ளும் உங்களின் உயிர் இரக்கமும் உங்களைச் செழிப்புடன் வாழ வைக்கும் என்று கூறி வாழ்த்தினாராம் சித்தர்.

''உயிர் இரக்கம் உயர்ந்த உன்னத புண்ணியம் வரம் வாங்கித்தரும்!'' என்ற தத்துவத்தை விளக்கும் இக்கதை திருக்குறள் மணி இறைக்குருவனார் கூறியது. தஞ்சைத் தரணியின் நாட்டுப்புறக் கதையாகும் இது.

## பண்டரிபுரம்

மராத்திய மாநிலத்தில் அமைந்திருக்கும் பூலோக வைகுந்தமாம் பண்டரிபுரத்தின் விட்டல் பாண்டுரங்கனைத் தரிசிக்க செல்வோம். இங்கு பாண்டுரங்கன், புண்டரீகன் போட்ட செங்கல்லின் மீது நின்று, அருள்புரிகிறார். புண்டரீகன் தனது பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றிய பின், பாண்டுரங்கனை தரிசிப்பதாக கூறியதால், அவர் போட்ட கல்லில் காத்திருப்பதாக ஐதீகம். பெற்றோருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் புண்ணியத்தலம்.

இக்கோயிலின் கிழக்கு நுழைவாயில் சந்திரபாகா ஆற்றை நோக்கி அமைந்துள்ளது. கோயில் நுழைவு வாயில் அருகே சோகாமேளர், நாமதேவர் ஆகியோரின் சமாதிகள் உள்ளன. கோயிலின் முதல் மண்டபத்தில் விநாயகர், கருடன் மற்றும் அனுமன் அருள்புரிகின்றனர். இரண்டாம் கட்டமாக பஜனைக் கூடமும், பின்னர் சில படிகளேறி மூன்றாம் கட்டமாக விட்டலரின் மூலமண்டபத்திற்குச் சென்றால், கருவறையில் கல்லின் மீது இடுப்பில் இரு கைகளையும் வைத்த வண்ணம் விட்டலன் காட்சி தருகிறான். அழகிய திருவுருவம்.

ஆலயத்திற்கு நான்கு வாசல்கள். கோயிலின் கிழக்கு வாயில் நாமதேவர் வாசல். கையில் தம்புராவுடன் இறைவனின் இசையில் மூழ்கியிருக்கும் நாமதேவரின் பித்தளைச் சிலை உள்ளது. கருவறையை நோக்கிச் செல்லுகையில் மகாமண்டபத்தில் தத்தாத்ரேயரையும், கணபதியையும்தரிசிக்கலாம். அடுத்துவரும்மண்டபத்தில் வழவழப்பான 16 கருந்தூண்கள். ஆங்காங்கே மாடங்கள்; ஒரு மாடத்தில் பளிங்கில் செதுக்கிய நரசிம்மர், இன்னொன்றில் சிருங்கார ராதாவும், கிருஷ்ணனும் காட்சி தந்து அம்மண்டபத்துக்கு அழகு சேர்க்கிறார்கள். மற்றும் ஒன்றில் செந்தூர கணபதி காட்சி தருகிறார். இங்கு ஒரு தூணுக்கு முழுக்க, முழுக்க வெள்ளிப் பூண் போடப்பட்டிருக்கிறது. இத்தூண் கருட கம்பம் எனவும், புரந்தரதாசர் கம்பம் எனவும் அழைக்கப்படுகிறது. ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் பாண்டுரங்கனைத் தரிசிக்கும் முன், இந்த தூணை ஆரத் தழுவி வணங்குகிறார்கள். அவ்வாறு செய்தால், தங்களது பாவங்கள் தொலையும் என்பது ஐதீகம். இம்மண்டபத்தின் கருந்தூண்களில் 64 மகாபாரதக் காட்சிகள் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. மேலும் மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களும் சிற்பங்களாக தூண்களில் இடம் பெற்றுள்ளன.

கருவறைக்கு வெளியே ஜய, விஜய துவாரபாலகர்கள், ஒரு கண்ணாடிப் பேழையில் திறந்தநிலையில் காட்சியளிக்கும் வேதநூல், அருகில் துக்காராமின் பாதுகைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மக்கள் அப்பாதுகைகளைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, கருவறை நோக்கி செல்கிறார்கள். இக்கோயிலின் வேறு மண்டபத்தில் கிருஷ்ணரின் பத்தினிகளான ருக்மணி, சத்தியபாமா மற்றும் ராதை, மகாலட்சுமி போன்றோர்களுக்கு சந்நிதிகள் உள்ளன. மேலும் நரசிம்மர், வெங்கடாசலபதி போன்றோருக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. ராதை மற்றும் கோபியர்களுடன் பாலகிருஷ்ணர் ராசலீலை ஆடுவது போன்று, பக்தர்கள் ஆடிப்பாடி விளையாடுவதற்கு கோயிலில் தனியொரு மண்டபம் உள்ளது.

கூட்டம் அதிகமிருப்பின் ஏழு மாடிகள் ஏறி இறங்கிச் சென்றுதான் விட்டல் ரகுமாயியைத் தரிசிக்க இயலும். அதிகாலை சென்றால் இரண்டு மாடிகள் ஏறினால் போதும். ஆஷாட ஏகாதசி இக்கோவிலில் மிகவும் விசேடம். ‘வாரி’ எனக் கூறப்படும் நடைப்பயணத்தை விட்டலனின் பக்தர்கள் மேற்கொள்கின்றனர். இவர்கள் ‘வர்க்காரி’ என அழைக்கப்படுவர். சுவாமி துக்காராம், சுவாமி ஞானேஸ்வரரின் பக்தர்கள் பல்லக்குகளுடன் நடைப்பயணமாக வருவர். இவர்கள் பாண்டுரங்கனைப் பேசும் தெய்வமாக வணங்குகின்றனர். அவரின் புகழ் பாடுபவர்கள் உண்மையான, எளிமையான பக்தியுடன் நாமஜபம் செய்யும் பக்தர்கள்.

பாண்டுரங்கனின் பரமபக்தர்களை வரும் மாதங்களில் தொடர்ந்து படிப்போம்! போற்றுவோம்!

திருமதி. லலிதா வேலாயுதம்.

## குரு அருளும் இறைவன் அருளும்

இறைவன் அருளிய அழகானவை இளமையின் துள்ளலும், முதுமையில் தள்ளலும்தான். அழகு தந்த தோல் பின் நாளில் சுருங்கும். அதுவும் காண்பறியா அனுபவம். இறைவன் அருளிய அவ்வழகும் வாழ்க்கை அனுபவமே.

இறைவன் தந்த பிறவியில் தொண்டர் தம் பெருமையும் சொல்லவும் பெரிது என்பது போல் யாம் செய்த நிகழ்வின் நினைவின் பலனாக சித்திரை மாத தமிழ் வருட பஞ்சாங்கம் கொடுத்தும் ஆலய உழவாரபணி செய்தலும் 63 மூவர் வரலாறு தெரிவித்து வழிபாடும், அப்பர் சதய நன் நாளில் சோதி வழிபாடும்.

வைகாசிமாதத்தில் ஸ்ரீதோத்திரபூரணாம்பிகா உடனாகிய ஸ்ரீ திருஞானசம்பந்தர் மூலம் நடசத்திர திருக்கல்யாண தருணத்தில் 30 ஆண்டுகளாய் ஸ்ரீ புனிதா கல்வி நிறுவனம் சார்பில் திருமுறை விபூதி குங்குமம் தாம்பூலம் வழிபாடும் பிரசாதம் வழங்குதலும் இரவு வீதியுலா நிகழ்வில் தருமை ஆதீனம் கட்டளை தம்புரான் சுவாமி அவர்களால் திருமுறை பூசை வழிபாடு செய்யும் தருணமும் இறைவன் தந்த குரு அருளே.

ஆனிமாதத்தில் இல்ல அடிகளாருக்கு குரு பூசை நிகழ்வும் சிவ பூசை செய்தலும் வஸ்திரமும் வஸ்திரம் சம்பாவனையும் அடிகளுக்கு வழங்குதலும் தில்லை திருமஞ்சனம் நிகழ்வு உற்சவ நாளில் தேர் வீதி உலா நிகழ்வில் கோலமிட கோலமாவு வழங்கியும் ஸ்ரீ புனிதவதியார் (காரைக்கால் அம்மையார்) நாளில் அன்பர்களுக்கு மாங்கனி வழங்குதலும்,

ஆடிமாதத்தில் திரு கைலாயம் அப்பர் சுவாமிகள் கண்ட திருவையாறு ஆலயமும் ஆலய தல யாத்திரை வழிபாடு செய்தலும் வீபூதி குங்குமம் பிரசாதம் வழங்குதலும் ஆடி சுவாதி நன்னாளில் 63வர் வரலாறு தெரிவித்தலும், ஆவணி மாதத்தில் மூலம் நன் நாளில் புட்டுவிற்கு மண் சுமந்த படலம் தெரிவித்து நைவேத்தியம் செய்து அன்பர்களுக்கு வழங்குதலும் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு உற்சவ விநாயகர் வழிபாடு செய்வதும்,

புரட்டாசி மாத மஹாளய பட்ச நல்நாளில் ஆலய தலயாத்திரை வழிபாடு செய்வதும் திருமுறை பாராயணம் செய்வதும்,

ஐப்பசி மாதத்தில் கங்காஸ்தானம் அன்று ஆலயங்களில் நல்லெண்ணெய் காப்பு இடுதலும் பணி செய்யும் பல ஆலயங்களில் மெய் காப்பாளர்களுக்கு வஸ்திரம் வழங்குதலும் 26–வது குருமகா சன்னிதானம் நாளில் சிறு காட்டூர் ஆலயத்தில் திருமுறை பாராயணம் செய்து வழிபடுதலும்,

கார்த்திகை மாத தீப நாளில் ஆலயங்களில் உழவாரம் செய்து தீப எண்ணெய் வழங்குதலும்,

தை மாதத்தில் இல்ல வழிபாடு முன்னோர்கள் வழிபாடு செய்வதும் மாசி மாதத்தில் மகா சிவராத்திரி வழிபாட்டில் பல ஆலயங்கள், வழிபடுதலும் சிவனார்பத்திரம் வழங்குதலும் அன்பர்களுக்கு திருநீறு குங்குமம் வழங்குதலும் விளா தல விருட்சத்தினை வழிபடுதலும்,

பங்குனி மாதத்தில் ஆலய வழிபாட்டில் திருவாசகம் முற்றோதல் செய்து வழிபாடு செய்வதும் 12 மாதங்களும் வீயதபாத நன் நாளில் இதற்கான ஆலயமான திருகுளம்பியம் ஆலய வழிபாடு செய்து நம்பிறப்பில் செய்யும் முடிந்ததை செய்யலாம் இயலாதது எதுவும் இல்லை அவன் அருள் பெற அவன் அழைத்தால் தான் எல்லாமே...

இறையருள் பெற குரு அருள் பெற வேண்டும் என்பார்கள். குரு அருள் பெற தருமை ஆதீன மடத்தில் தினம் வழிபாடு 27–வது குருமகா சன்னிதானம் செய்யும் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாட்டில் வழிபாடு செய்தல் குரு அருள் கிடைக்கும் என்பது சான்றோர் மரபு.

தொடரும்...

– வேளா சுவாமிநாதன், ஆச்சாள்புரம்.

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/5** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை – 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | 21.11.1998<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer, Fresh Works Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell : 90801 87596, 94445 56972 |
| **B 2/5** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 3/5** செல்வி **S. சத்யா**<br>சதயம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர் | 20.05.98<br>5' - 6" | B.Sc., (Computer Science) MBA | Welfare Officer Young Brand Apparal, Private Ltd.,<br>Rs. 3,00,000/PA | திரு. A. செந்தில்,<br>23அ, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு, திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : 94873 32726, 94454 53251, 94452 97413 |
| **B 4/5** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | 17.3.2001<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>5, கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. – 621 652.<br>Cell : 99430 39473, 97877 83735 |
| **B 5/5** செல்வி **A. சுவாதிலட்சுமி**<br>சுவாதி<br>மாயலுட<br>மயிலாடுதுறை<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : தமிழ்நாடு / நிரந்தர பணி | 25.2.2000<br>165 cm | M.Com. DCFA, | தனியார் IT (தற்போதைக்கு இல்லை) | திரு. S. இராஜேந்திரன்,<br>44, சித்தி விநாயகர் நகர்,<br>செம்பனார்கோவில்,<br>தரங்கம்பாடி வட்டம் – 609 309.<br>மயிலாடுதுறை மாவட்டம்<br>Cell : 94432 28227 |
| **B 6/5** செல்வி **A. பிரியதர்ஷினி**<br>கேட்டை<br>பெருவுட<br>பூர்வீகம் : காரைக்கால்<br>விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன் | 31.7.2001<br>5' - 10" | B.Com., MBA, | | திரு. S. அருணாச்சலம்,<br>3/2, புனிதவதியார் வீதி,<br>L.A. சினிமா எதிரில்,<br>கோவில் பத்து,<br>காரைக்கால் – 609 605.<br>Cell : 77083 55943, 97861 75776, 94865 09943 |


| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 7/5** செல்வி **S. மிர்த்திகா**<br>அஸ்வினி<br>வேளாண்<br>பூர்வீகம் : கொங்கராயநல்லூர்<br>விருப்பம் : படித்த வரன் அல்லது வேலையில் உள்ள வரன். | **13.4.2002** | B.E. (CS)., | TNQ Tech Ltd.<br>Chennai | திரு. P. சுரேஷ் (ஆசிரியர்),<br>410/G, தேவநாதபுரம் நகர்,<br>பூந்தோட்டம்,<br>திருவாரூர் மாவட்டம் – **609 503.**<br>Cell: **74186 83699, 97150 10780** |
| **B 8/5** செல்வி **சு. தீபிகா**<br>அவிட்டம்<br>ஆலச்சுட<br>பூர்வீகம் : உடையார்குடி – காட்டுமன்னார்கோயில்<br>விருப்பம் : சமமான கல்வி மற்றும் நல்ல பணியில் உள்ள வரன் | **22.6.2000**<br>154 cm | B.E. (CSE)<br>MBA (HRM) | ITயில் Work from Home செய்து வந்தவர். தற்காலிகமாக வேலை இல்லை | திரு. சி. சுரேஷ்,<br>52, லால்கான் தெரு,<br>சிதம்பரம்,<br>Cell : **99942 11344, 90800 87479** |
| **B 9/5** செல்வி **U. ஜெகதீஸ்வரி**<br>திருவாதிரை<br>வில்வராய<br>பூர்வீகம் : திருவாரூர் | **27.1.2001** | B.Com.,<br>MBA | HR CAD<br>MACRO | திரு. K. உமாபதி,<br>30/40, மாறன் நகர்,<br>வண்டி கேட், சிதம்பரம்,<br>Cell : **97913 47079** |
| **B 10/5** செல்வி **சு.ரா. பவிதா**<br>பூராடம் 1ம் பாதம்<br>நெப்புக்குட<br>பூர்வீகம் : கூடலூர் (கடலூர் மாவட்டம்) | **10.12.1999**<br>160 cm | M.Sc. (Maths),<br>B.Ed., | | திரு. வை. இராஜேந்திரன்,<br>49, சபரி நகர்,<br>Dr. மூர்த்தி ரோடு,<br>கும்பகோணம் – **612 001.**<br>Cell : **94421 43370, 94430 87504** |
| **B 11/5** செல்வி **S. பவதாரணி**<br>பூராடம்<br>வில்வராய<br>பூர்வீகம் : பூம்புகார்<br>விருப்பம் : MBBS with PG (Studying also) | **18.4.1998**<br>164 cm | MBBS, MS.,<br>General Surgery<br>Now Studying III Year<br>Tagore Medical College | | திரு. S. செந்தில் மோகன்,<br>167, II வது மெயின் ரோடு,<br>லெஷ்மி நகர் விஸ்தரிப்பு,<br>போரூர், சென்னை – **600 116.**<br>Cell : **99625 93538, 82208 23078** |
| **B 12/5** செல்வி **S. Veenashree**<br>Bharani<br>Thanabaluda<br>பூர்வீகம் : Mayiladuthurai<br>விருப்பம் : Looking for post graduate professional, Well settled groom with good manners | **29.12.1998**<br>170 cm | Chartered Accountant<br>B.Com. (Hons) | Associate in PWC<br>Bangalore<br>Rs. 12-14 Lakhs/PA | திரு. S. Ganesan,<br>12/882, Ramasamy Salai,<br>K.K. Nagar West,<br>Chennai - 600 078.<br>Cell : **95001 33229**<br>E-mail : shobaganesh@yahoo.com |



| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/5** செல்வன் **K. கைலாஷ்**<br>திருவாதிரை 2ம் பாதம்<br>விளந்துட<br>பூர்வீகம் : சிறகிழந்தநல்லூர் (சிதம்பரம் Tk.)<br>விருப்பம் : சமபடிப்பு, பணிபுரியும் வரன் | **23.12.99**<br>182 cm | B.E (Mech)<br>MBA | IT, CTS,<br>Chennai<br>Rs. 6.5 Lakhs/PA | திரு. B. கார்த்திகேயன் பிள்ளை,<br>Flat No. G3, Plot No. 12,<br>ரேடியோ காலனி 2வது தெரு,<br>ECR பாலவாக்கம்,<br>சென்னை –600 041.<br>Cell : **76958 55865** |
| **G 2/5** செல்வன் **U. ஸ்ரீராம்**<br>(எ) **செல்வமுத்து**<br>பூரட்டாதி<br>பூர்வீகம் : பல்லவராய | **12.08.95**<br>5' - 6" | Dip. in<br>C.E. | Prop. Vinayaka<br>Cable Vision<br>Rs. 40,000/PM | திரு. K. உதயகுமார்,<br>40/1, வெள்ளாழத் தெரு,<br>மணல்மேடு,<br>மயிலாடுதுறை Dt. – **609 202.**<br>Cell : **94878 85900, 82488 28378** |
| **G 3/5** செல்வன் **பா. ஆதித்யன்**<br>உத்திரட்டாதி 4ம் பாதம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர்<br>விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன். | **17.08.92**<br>5' - 11" | B.E. (ECE) | ராம்கோ சிஸ்டம்<br>சென்னை<br>Rs. 14 Lakhs / PA | திரு. A. பாலசுப்ரமணியன்,<br>23A, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு,<br>திருவிழுந்தூர்,<br>மயிலாடுதுறை Dt.<br>Cell : **94873 32726, 94454 53251** |
| **G 4/5** செல்வன் **R. ராகுல்**<br>ரேவதி 2ம் பாதம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : பெருஞ்சேரி (மயிலாடுதுறை)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **15.08.95**<br>5' - 10" | B.E. (EEE) | Software<br>Professional,<br>Azentio, Chennai<br>Rs. 6 Lakhs/PA | திரு. V. ராஜூ,<br>388C/2, செட்டித் தெரு,<br>சேந்தங்குடி,<br>மயிலாடுதுறை – **609 001.**<br>Cell : **97865 93037, 88255 02182** |
| **G 5/5** செல்வன் **P. ராகுல்**<br>சுவாதி<br>கூடலுட<br>விருப்பம் : படித்து பணியில் உள்ள வரன் | **25.12.97**<br>179 cm | B.E.,<br>Mechitronics | Kone Elevator<br>India Pvt. Ltd.<br>Ambattur, Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. M. பாண்டியன்,<br>15/12, நரசிம்மன் தெரு,<br>மேற்கு மாம்பலம்,<br>சென்னை – **600 033.**<br>Cell : **89460 74541, 98418 31008** |
| **G 6/5** செல்வன் **கி. கார்த்திகேயன்**<br>அனுஷம்<br>பல்லவராயன்<br>பூர்வீகம் : உடையார்குடி (காட்டுமன்னார்குடி) | **13.11.85**<br>6' - 0" | D.E.E.E. | CRUISE SHIP<br>USA<br>Rs. 1,20,000/PM | திருமதி. கி. சீதாலட்சுமி,<br>பஜனைமடம் தெரு கிழக்கு,<br>உடையார்குடி<br>காட்டுமன்னார்கோவில் –**608 301.**<br>Cell : **97104 16633** |
| **G 7/5** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Analyst<br>Accenture<br>Chennai<br>Rs. 9 Lakhs.PA | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **G 8/5** செல்வன் **V. அஜித்குமரன்**<br>அசுவிணி<br>பருவுட<br>பூர்வீகம் : அருகேரி (பெண்ணாடம்)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.11.99**<br>174 cm | B.E. (MCT) | State Bank of India<br>Salem<br>Rs. 8 Lakhs/PA | திரு. R. வரதராஜன்,<br>2/632, ஆரமரத்துகாடு By Pass<br>காமராஜர் சிலை அருகில்,<br>எருமாபாளையம் PO.,<br>சேலம் – **636 015.**<br>Cell: **9443134352** (W), **9442213435** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/5** செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம்<br>விருப்பம் : தகுந்த வரன் | **28.10.94**<br>170 cm | B.E. (CSC) | IT Analyst<br>TCS, Chennai<br>Rs. 6 Lakhs/PA | திருமதி. உமா பரஞ்ஜோதி,<br>5-A/84C,1A, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – **612 212.**<br>Cell : **97874 84028,**<br>**97505 29615** (W) |
| **G 10/5** செல்வன் **R. பிரவீன்**<br>சுவாதி<br>குழுமுட<br>பூர்வீகம் : நந்திமங்கலம், பூலாமேடு | **18.12.95**<br>160 cm | B.E. (Mech) | IT Field<br>Rs. 70,000/PM | திரு. C. ரமேஷ்,<br>66, பள்ளிக்கூடத் தெரு,<br>அம்மாபேட்டை, சிதம்பரம் Tk.,<br>கடலூர் Dt.<br>Cell : **98423 03216, 88709 23031** |
| **G 11/5** செல்வன் **G. விஜய்**<br>பரணி<br>எருக்கலுட<br>பூர்வீகம் : திருவாவடுதுறை<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **14.09.95**<br>180 cm | B.E.<br>(Mech.) | Business | திரு. G. கணேசன்<br>54, ராஜா தெரு, சுப்ரமணியபுரம்,<br>திருச்சி – **20.**<br>Cell : **75025 56085, 97883 77104** |
| **G 12/5** செல்வன் **V. கார்த்திபன்**<br>அவிட்டம்<br>அதுக்கனுட<br>பூர்வீகம் : கருவாழக்கரை, மேலையூர் | **18.11.96**<br>175 cm | B.E.<br>(CSE) | Software Engineer<br>Hexware Technologies<br>Chennai<br>Rs. 6 Lakhs/PA | திரு. V. வெங்கடாசலம்<br>144, வண்டிக்கார தெரு,<br>லஷ்மி நகர், சித்தர்காடு<br>மயிலாடுதுறை – **609 003.**<br>Cell : **94431 09443, 94877 09443** |
| **G 13/5** செல்வன் **T.A. அருணாசலம்**<br>பூரட்டாதி<br>வேளாருட<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **30.4.2000**<br>188 cm | B.E.<br>(EIE) | Software Analyst<br>Agilysys<br>Chennai<br>Rs. 75,000/PM | திரு. T.A. ஆறுமுகம்<br>25, சித்தர் தெரு,<br>மேல ரத வீதி,<br>திருநெல்வேலி டவுன் – **627 006.**<br>Cell : **99946 02591, 99946 02592** |
| **G 14/5** செல்வ **S. ரவீன்குமார்**<br>சதயம் 1ம் பாதம்<br>கனகராய<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள வரன். | **21.11.93**<br>175 cm | M.Tech.. | Senior Engineer, VLSI<br>Multicoreware Inc.<br>Uhnder inc<br>Rs. 22 Lakhs/PA | திரு. A. சங்கர்<br>28 & 29, VGN Highness,<br>Vikramaditya Street,<br>Iyyappanthangal, Chennai - 600 056.<br>Cell : **78459 14635, 86670 33721,**<br>**94447 48490**<br>E-mail : spvrk1956@gmail.com |
| **G 15/5** செல்வ **K. சசிதரன்**<br>திருவாதிரை<br>கொங்கராய<br>பூர்வீகம் : நெடுவாசல்<br>குறிப்பு : மறுமணம், முதல் மனைவி விபத்தில் இறந்துவிட்டார்கள். | **07.07.94**<br>177 cm | B.E. (CS) | Business at Tiruppur<br>Rs. 30 Lakhs/PA | திரு. K. சம்பத்குமார்<br>83/1, மருதம் அப்பார்ட்மெண்ட்,<br>7th Cross, தில்லை நகர்,<br>திருச்சி – **612 018.**<br>Cell : **96004 91818, 95979 84093** |





# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

எதுவும் இல்லாதபோது ,சமாளிக்கும் திறமையும் எல்லாம் உள்ளபோது
நீ நடந்துகொள்ளும் முறையும் வெற்றியை தீர்மானிக்கிறது.

## நம்பினோர் கெடுவதில்லை!



சில நூறு மைல் பயணம் செய்வதானால் நீங்கள் எவ்வளவு முன் ஏற்பாடுகள் செய்து கொள்வீர்கள ? வாகனவசதி, உணவு ஏற்பாடு, வழியில் தங்க, ஓய்வெடுக்க வாய்ப்பு உண்டா என்றெல்லாம் எவ்வளவு கவலைப்படுவீர்கள் ? உடைத்துச் சொன்னால் கார் ரிப்பேர் ஆகலாம். உணவு கிடைக்காமல் போகலாம்.ஓய்வெடுக்க வசதியில்லாமல் போகலாம் என்று பயப்படுவீர்கள். சுகமாகப்போய் சேரலாம் என்ற நம்பிக்கையைவிடச் சிரமப்படுவோமோ. போய்சேரமாட்டோமோ என்கிற அவநம்பிக்கைதான் பலருக்கு அதிகமாக இருக்கும். மனிதனுக்கு இயற்கை கொடுத்துள்ள அறிவு, வருமுன் காக்கும் திறன். ஆபத்துக்களை எதிர்பார்க்கும் முன்னெச்சரிக்கை இன்று அவ நம்பிக்கையை உருவாக்குகிறது.


ஆனால் கனடாவில் இருந்து மெக்ஸிகோவுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் நம்பிக்கையோடு ஆண்டுதோறும்கூட்டம் கூட்டமாக ஒரு பயணம் நிகழ்கிறது பயமில்லை. அவநம்பிக்கையில்லை

...வழியில் உணவு கிடைக்குமா கிடைக்காதா என்கிற கவலை இல்லை. சுகமாக உற்சாகமாக ஆடிப்பாடி அந்தப்பயணம் நடக்கிறது.பயணம் செய்வது யார் தெரியுமா ? பட்டாம் பூச்சிகள். வண்ணத்துப்பூச்சிகள். கோடி கோடியாகப் பறக்கின்றன. பரந்து விரிந்து கிடக்கும் பிரபஞ்சத்தை அவை நம்புகின்றன. உணவு அளிக்கும். ஓய்வளிக்கும். நமக்கு மரணம் நிகழாது என்று உலகத்தின்மீது நம்பிக்கை வைத்து பட்டாம் பூச்சிகள் கனடாவிலிருந்து மெக்ஸிகோவுக்குக் கோடிக்கணக்கில் பறந்து செல்கின்றன..

நமது தாய்மண் நமக்கு வாழ்வு தரும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. ஆனால் வேடந்தாங்கலையும் அதில் உள்ள ஏரிகளையும் அதனைச் சுற்றிய மரங்களையும் நம்பி கண்டம் விட்டு கண்டம் கடந்து பட்சிகளும், பறவைகளும் வருடம் தோறும் வருகின்றன. இந்த உலகம் நம்மைக் காப்பாற்றும், வழி கொடுக்கும் என்று பட்டாம் பூச்சிகளும் பறவைகளும் நம்பிக்கைப் பாடம் நடத்துகின்றன. அந்தப்பாடத்தை நீங்கள் படித்ததுண்டா ? நம்புங்கள்... நம்புங்கள் வெற்றி உண்டாகும். – நன்றி சுகி சிவம்

## ஜோக்ஸ்

1. என்னது ? கால்மேல கால் போட்டதுக்கா உன்னை வேலையைவிட்டு அனுப்பிட்டாங்க !
   நான் கால்மேல கால்போட்டது டெலிபோன்லதான் !
2. தலைவரை திறந்தவெளி சிறைக்கு மாத்திட்டாங்களா.. ஏன் ?
   அறையிலிருந்த தட்டு, முட்டு சாமானெல்லாம் எடுத்து வித்துட்டாராம்.
3. கடலுக்குப் பக்கத்திலேயே லைட்ஹவுஸ் கட்டிறாங்களே. ஏன் ?
   லைட்ஹவுஸ் பக்கத்தில கடல் கட்ட முடியாது




## புதிருக்கான விடை என்ன?

இங்குள்ள புள்ளிகளில் 12 புள்ளிகளை நேர்கோடுகளால் இணைத்து, பெருக்கல் குறி உருவாக்க வேண்டும். பெருக்கல் குறியின் உள்ளே ஐந்து புள்ளிகளும், வெளியே, எட்டு புள்ளிகளும் இருக்கவேண்டும். எப்படி ?



**உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு..**

அறிவு என்பது உயர்ந்த சான்றோர்களை நட்பாக்கிக் கொள்வதோடு நண்பர்களிடம் தொடக்கத்தில் மிக மகிழ்ச்சி கொள்வதும் பின்னர் மனம் வருந்துதலும் இன்றி பழகுதலாகும்.



## விடுகதைகள்

1. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன பூ ?
2. அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்கவைக்கும். அது என்ன ?
3. அழகழகாய் பூப் பூக்கும் அம்மாடின்னு அழவைக்கும். அது என்ன ?
4. அரைப்படி அரிசி பொங்கி ஆயிரம்பேர் உண்டு அரைச்சட்டி மிச்சம். அது என்ன ?
5. பகலில் துயில்வான் இரவில் அலறுவான். அது யார் ?
6. மூடித்திறக்கும் முத்திருக்கும் பெட்டி. பாடும் படிக்கும் பாம்பிருக்கும் சட்டி. அது என்ன ?
7. எண்ணெயில் கோலம் போட்டு எடுத்த ஒரு பின்னல் தட்டு. அது என்ன ?
8. உயிரில்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன ?
9. ஊருக்கு நடுவே உயர்ந்திருக்கும்,உருவங்கள் பலவும் சுமந்திருக்கும். அது என்ன ?
10. இரவெல்லாம் கூவும் கோழி. எது ?
11. பிடிக்கவே முடியாத கள்ளன்அவன் யார் ?
12. மண்ணுக்குள் மட்காத கயிறு. அது என்ன ?
13. மளிகைக்கடையில் இருக்கும் ராணி. என்ன ராணி ?

## அறிவியல் என்னசொல்கிறது?



நம் உடலில் தோற்றுவிக்கப்படும் ஆற்றலில் பெரும்பகுதி மூளைக்கே பயன்படுத்தப் படுகிறது. தகவல்களை உரிய முறையில் பெற்று செயல்படுவதற்கு மட்டுமல்லாது முக்கியத் தகவல்களை அணுகுவதற்கும் தேவையான தகவல்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கும் ஆக்சிஜன். குளுக்கோஸ் மற்றும் ஊட்டச்சத்துக்கள் தேவை. இவை கிடைக்காத நிலையில் குறுகிய நேரமறதி மற்றும் மூளைச்சோர்வு ஆகியவைகள் ஏற்படலாம். சில நேரங்களில் இதன் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டு நிரந்தர மறதியும் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாகதேர்வு காலங்களில் படிக்கும் சிறார்களுக்கு அதிக வேலைப் பளுவினால் நரம்பு மண்டலம் மிகுந்த அழுத்தத் திற்குள்ளாகிறது. எனவே நரம்பு மண்டலம் சிறப்பாக செயல்பட ஆரோக்கியமான சமச்சீரான உணவு தேவை. குறிப்பாக நல்ல காய்கறிகள், பழங்கள், சத்துள்ள உணவு தேவை. பாட்டில்களில் அடைக்கப்பட்ட பானங்களும், துரித உணவு வகைகளும் தவிர்க்கப்படுதல் வேண்டும். இவை மன குறைபாடுகளைத் தூண்டும் தன்மை கொண்டவை. சிறுவர்களாகிய நீங்கள் நார்ச்சத்து மிக்க ஓட்ஸ் போன்ற உணவு வகைகளை சாப்பிட்டு தேர்வு நேர படிப்புக்கு தயார் செய்து கொள்ளுங்கள்.

## சிரிப்புக்கு சில

1. ஆப்பரேஷன் பண்ணப்போன டாக்டர் மொபைல்ல வந்த மெசேஜ்ஜ பார்த்ததிலிருந்து ரொம்ப டென்ஷனா இருக்காரே ஏன் ?
   கத்திய எடுத்தவன் கத்தியாலதான் சாவான்னு நேரம்பாத்து எவனோ மெசேஜ் அனுப்பியிருக்கான்.
2. டாக்டர் நீங்க பெரிய சர்ஜனா இருந்தும் ஆப்பரேஷன் பண்றதைவிட மாணவர்களுக்கு க்ளாஸ் எடுக்கறதுலதான் ஈடுபாடு அதிகம்னு சொல்லறீங்களே ஏன் ?
   இங்கே ஒரே நேரத்துல நூறு பேரை அறுக்க முடியுமே!
3. எதுக்கு டாக்டர் காது ஓரத்தில வெல்லக்கட்டியை வெச்சிரிக்கீங்க ?
   காதிலே புகுந்த எறும்பு இப்போ வெளியே வந்துடும் பாருங்க...!
4. டாக்டர் ! நீங்க கொடுத்த மருந்து எந்தகடையிலயும் கிடைக்கலையே!
   அடப்பாவி ,பேனா எழுதுதான்னு கிறுக்கிப்பார்த்த சீட்டுய்யா இது!
5. என்னது அந்த டாக்டர் தினமும் ஆஸ்பத்திரிக்கு நடந்தே போறாரு!
   அவர் கால்நடை டாக்டராச்சே!
6. ஆசிரியர்: நான் வருகிற வழியில் ஒரு கழுதையை ஒருத்தர் அடிச்சிகிட்டிருந்தாரு.நான் கஷ்டப்பட்டு தடுத்து நிறுத்தினேன்.என்கிட்ட இருந்த இந்த பண்புக்கு என்னபேர் என்று சொல்லுங்கள் பார்ப்போம்.
   மாணவன்: சகோதர பாசம் அல்லது இனப்பற்று சார்!

## எப்படி வாழவேண்டும் ?

இன்னாரைப்போல வாழவேண்டும் என்று நாம் நினைப்பதைவிட நம்மைப்போல வாழவேண்டும் என்று பிறர் எண்ணும் அளவிற்கு நாம் வாழ்ந்து காட்டுவதே சிறப்பு.

## இவை தெரியுமா?

**ஹங்கேரி :** ஹங்கேரி நாட்டில் டெப்ரெகன் என்ற நகரில் உள்ள ஒரு ஒட்டலில் ஒவ்வொ ரு மேஜை மீதும் கடிகாரம் வைக்கப்பட்டிருக்கும் .நாம் ஆர்டர் கொடுத்து விட்டு பத்து நிமிடங்களுக்கு மேல் அது தாமதமாக வந்தால் .அந்த உணவு நமக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.



**லேடீஸ்ஃபிரிட்ஜ் :** லண்டனில் உள்ள வாட்டர்லு பாலத்திற்கு லேடீஸ்ஃபிரிட்ஜ் என்ற பெயரும் உண்டு .காரணம் இரண்டாம் உலகப் போரின்போது பெரும்பாலான ஆண்கள் போருக்குச் சென்றுவிட்டதால் பாலத்தின் கட்டுமானப்பணியில் அதிக அளவிலான பெண் தொழிலாளர்களே ஈடுபட்டிருந்தனர். எனவே அந்தப்பாலத்திற்கு அப்படி ஒரு பெயர் கிடைத் ததாம்.



**தேக்கு மரம் :** பல ஆண்டுகள் மழையில் நனைந்தாலும், மண்ணில் கிடந்தாலும் தேக்கு மரத்தை மட்டும் கரையான் அழிப்பதில்லை. இம்மரத்தில் ஆணி அடித்தால் துரு பிடிப்பது இல்லை. காரணம் அதிலுள்ள குங்குலியம் போன்ற எண்ணைப் பசைதான்..



**பிளாட்டீனம் :** தங்கத்தைவிட பத்துமடங்கு மதிப்பு மிகுந்த உலோகம் பிளாட்டீனம். ஆனால் பளபளப்பு இன்மையால் மக்களிடையே அதிக மவுசு இல்லை. உலோகத்தாதுவில் பத்தில் ஒரு அவுன்ஸ் அளவு என்ற விகிதத்தில் கிடைப்பதால் இது மிகவும் அரிதான உலோகமாயிற்று. நகைக்கு மட்டுமல்ல. பேனா முதல் விமானம் வரை பல விதமான பொருட்கள் தயாரிப்பில் பிளாட்டீனம் பயன்படுகிறது.



**ஐஸ்கிரீம் :** ஐஸ்கிரீம் முதன்முதலாக கண்டுபிடிக்கப் பட்டபோது அரச பரம்பரையினர் மட்டுமே ருசித்துச் சாப்பிடும் உணவாக இருந்தது. ஐஸ்கிரீம் 13ஆம் நூற்றாண்டில் சீனாவில் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. மங்கோலிய அரசன் குப்ளாய்கான் (1260–1295) காலத்தில் சொந்தமாக யாரும் ஐஸ்க்கிரீம் தயாரிக்ககூடாது என்ற தடையிருந்தது. இத்தாலிய பயணியான மார்க்கோ போலோ சீனாவிற்கு வந்து அரண்மணையில் தங்கியிருந்த சமயம், அந்த ரகசியத்தை அறிந்து இத்தாலிய அரச சபையில் வெளியிட்டார். 1500ம் வருடம் வரை அந்த ரகசியத்தை காப்பாற்றிவந்தவர்கள் பிரான்ஸ் நீதிமன்றம் அனுமதி பெற்று அதை வெளியிட .உலகமெங்கும் ஐஸ்கிரீம் செய்யும் முறை பரவியது..



**வீணை :** ஏழு ஸ்வரங்களுக்குள் ஏழு கோடி ராகங்கள் என்றால் நம்ப முடிகிறதா ? ஆம் வீணையின் மூலம் இந்த ஏழுகோடி ராகங்களையும் இசைக்கவும் மீட்டவும் முடியும் என்பதுதான் உண்மை! ஆமாம், இந்த வீணையின் விலை என்ன தெரியுமா ?இரண்டாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை! கல்விக் கடவுளின் கையில் இருப்பதும் வீணைதானே!

இலங்கேஸ்வரன் தனது ஆட்சிக்கொடியில் வீணையைத்தான் சின்னமாகப்பொறித்திருந்தாக வரலாறு கூறுகிறது. இது தொடர்பான முக்கியச் செய்தி டாக்டர். அப்துல்கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான இசைக்கருவியும் இதுதான்.



**குழந்தை நினைத்துக்கொண்டது**

அப்பா, அம்மா குழந்தை முன்று பேரும் ஒரு காரில் போகிறார்கள். வழியில் கார் நின்றுவிடுகிறது. அப்பா கீழே இறங்கி ஒரு கையால் ஸ்டியரிங் வீலைப்பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் காரைத்தள்ளுகிறார். அம்மா கீழே இறங்கி காருக்குப்பின்னால் இருந்து தள்ளுகிறார். அந்தக் குழந்தை காருக்குள்ளேயே இருந்துகொண்டு அந்தக்காரின் முன்பக்கக் கண்ணாடியைத்தள்ளியது. கொஞ்ச நேரத்தில் கார் ஸ்டார்ட் ஆகியது. அப்பாவும், அம்மாவும் ஏறி உட்கார்ந்தார்கள். கார் புறப்படப்போகிறது. இப்போது அந்தக்குழந்தை நினைத்துக்கொண்டதுநான் தள்ளியதால்தான் இந்தக்கார் நகர்ந்தது!

## கால்சியத்தின் அவசியம்

நமது உடலுக்கு இன்றியமையாதக் கனிமங்களுள் ஒன்று கால்சியம்.கால்சியம் நமது எலும்பு வளர்ச்சிக்கு, பற்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்றுமட்டுமே எண்ணி வந்திருப்பீர்கள்.

ஆனால் கால்சியம் உடலின் பல்வேறு இன்றியமையாத பணிகளுக்கு அவசியமாக இருந்து வருகிறது.எலும்புகள், பற்கள் உறுதிக்கும், எலும்பு முறிவை சரி செய்வதற்கும், ஆஸ்டியோ போரோசிஸ் பாதிப்பைத் தவிர்ப்பதற்கும், தசை, நரம்பு செல்கள் செயல்படுவற்கும், இரத்தம் உறைவதற்கு, இதயம் தொடர்பான நோய்களைத் தவிர்ப்பதற்கும், சிறுநீரகக் கற்கள் தோன்றாதிருக்கவும், உயர் இரத்த அழுத்தத்தை சரிசெய்வதற்கும் கால்சியம் அவசியமாகிறது. முழுவளர்ச்சி அடையும் முன்பாகக் குழந்தைப் பிறப்பதை தடுக்கிறது, இரத்தத்திலுள்ள கொலஸ்டிரால் அளவை சீராக வைத்திருக்கிறது. மாதவிடாய் காலத்தின் போதுதோன்றும் முதுகுவலி, தசைப்பிடிப்பு ஆகியனவற்றை பெருமளவில் குறைக்கின்றது. உணவுவழியாக நாம்பெறும் கால்சியத்தின் அளவு இளம் வயதில் குறிப்பாக குழந்தைப் பருவத்தில் அதிகமாக இருப்பினும் 50 வயதிற்கு மேற்படும்போது கால்சியம் உள்ளீர்ப்புத்திறன் குறைகிறது.கால்சியம் மிகுந்த உணவை உட்கொள்வதால் மட்டுமே நமக்குக் கால்சியம் கிடைப்பதில்லை. கால்சியம் பல்வேறுகாரணிகளால் தடைசெய்யப்படுகிறது. இது உங்கள் வயது, கர்ப்பகாலம், உங்கள் உடலிலுள்ள கால்சியம், வைட்டமின் D, $K_2$ மக்னீசியம் மற்றும் சில நுண் கனிமங்களின் அளவைப் பொறுத்தும் உள்ளீர்ப்பு வேறுபடுகிறது. பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றன. உரோமானியர்கள் தண்ணீர்க் குழாய்களிலிருந்து,சமையல் பாத்திரங்கள்வரை ஈயத்தினாலேயே தயாரித்து வந்தனர். உடலில் சிறுகச் சிறுக சேர்ந்த ஈயம் எலும்பிலிருந்த கால்சியத்தை அகற்றிவிட்டது.இதனால் ரோமானியர்களின் வாழ்நாள் 25 ஆண்டுகளாகக் குறைந்துவிட்டதாகவும்,நரம்புசெல்கள் பாதிக்கப்பட்டன என்றும் உரோமப்பேரரசு அழியக் காரணமாகியது என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். வைட்டமின் D2 கால்சியம் உள்ளீர்ப்பை அதிகரிக்கின்றது என்றாலும் மக்னீசியம் குறையும்போது கால்சியம் வளர்சிதைமாற்றம் பாதிக்கப்படுகின்றது. 18 வயதில் 1300மி. கிராமாக உள்ள கால்சியம் உள்ளீர்ப்பு 50 வயதில் 1000மி.கிராமாகக் குறைகிறது. கருவுற்றிருக்கும் பெண்கள், தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் ஆகியோரின் கால்சியம் உள்ளீர்ப்புத்திறன் அதிகமாகவே இருக்கும்.கால்சியம்நமக்கு பால், தயிர்,பாலாடைக் கட்டி, சோயாபீன்ஸ், கருவேப்பிலை,முருங்கைக்காய், முட்டைக்கோஸ்,பாதாம்பருப்பு போன்றவைமூலமாக நன்கு கிடைக்கின்றது. கால்சியம் வளரும் குழந்தைக்கும், பால்புகட்ட இருக்கும் தாய்க்கும் தேவை என்பதை அறிந்திருந்தமையாலேயே பல ஆண்டுகள் முன்பிருந்தே கருவுற்ற பெண்டிரை வெற்றிலை போடும்படியாக அறிவுரைக்கூறி வந்துள்ளனர். *Ref:Sc.Reporter*

---

**மெண்டல் பிளாக்** அனைவருக்குமே இந்த மெண்டல் பிளாக் இருக்கும். காரணம் மட்டும் வேறுபடக்கூடும். அதாவது ஒரு செயலுக்கான அடிப்படை முயற்சி ஏதும் மேற்கொள்ளாது, என்னால் இது முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும் பழக்கம்தான் இது. நான்காம் வகுப்புக் கணக்கைக் கொடுத்தால்கூட ஐயோ.... கணக்குல நான் ரொம்ப வீக் ! என்று படித்துப் பட்டம் பெற்றவர்களே அந்த இடத்தைவிட்டு ஓடிவிடுவார்கள். பொதுவாக நம்மில் பலர் நூறு ரூபாய்க்கு அதிகமாக இருந்தால், அந்தபொருளை வாங்க பின்வாங்குவோம். இந்த மனவியல் தெரிந்துதான் சிலர்(பாட்டா போன்ற நிறுவனங்கள்) தங்கள் பொருட்களுக்கு 99 அல்லத 999 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கிறார்கள்.


## இங்கும் அப்படித்தான்

வாட்டிகன் நகரத்தில் உள்ள அலுவலகத்தின் ஒரு பகுதியை ,போப்பாண்டவர் வெளிநாட்டிலிருந் வந்த தூதர் ஒருவருக்குச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார்.... இங்கு எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் ?...என்று தூதுவர் கேட்டார்....ஏறக்குறைய பாதிபேர்... என்று போப்பாண்டவர் சிரிக்காமல் பதில் சொன்னார்.

## விடுகதை விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.சிரிப்பு | 2.மிருதங்கம் | 3.நெருஞ்சி முள் | 4.சுண்ணாம்பு |
| 5.ஆந்தை | 6.வாய் | 7.முறுக்கு | 8.தராசு |
| 9.கோபுரம் | 10.சுவர்க் கோழி | 11.புகை | 12.மண்ணுளிப்பாம்பு |
| 13.சாம்பிராணி | | | |

## புதிருக்கான விடை



# சீர்மிகு செம்மங்குடி நாயகன்

**மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.**

– ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதிநெறி விளக்கம்

என்ற பாடலின் இலக்கணத்திற்கு ஏற்ற வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய, சான்றாண்மை கொண்ட திருமகன், நம்மிடையே இருந்து மறைந்த தெய்வத் திரு.தி.கபீர்தாஸ் அவர்கள், கைக்கொண்ட காரியத்தை முடிப்பதில் ஊக்கமுடையவர், உழைப்பையும், உணவையும், ஊறுகளையும் கருதமாட்டார் என்பது பாடலின் கருத்தாகும். செந்நெல்லும், செங்கரும்பும் விளையும் வளமார்ந்த சீர்காழிப் பதியின் அருகே செம்மைநலம் மிக்க செம்மங்குடியில், குளத்துட கோத்திரத்தில் 08.02.1936-ம் நாளில் தெய்வத்திரு. திருநாவுக்கரசுப் பிள்ளை - தெய்வத்திருமதி. ஜெகதாம்பாள் இணையருக்குப் பிறந்த பன்னிரண்டு குழந்தைகளில் ஐந்தாவது மகவாகப் பிறந்தவர் திரு.கபீர்தாஸ் அவர்கள். அன்னார் பிறந்த நடுவீடு மிகப்பெரிய மக்கள் கூட்டத்தைக் கொண்டது. அந்த சுற்றத்தைத் தனது இறுதி நாட்கள் வரை விடாமல் கொண்டாடி வந்தது, இவரின் தனிப்பெரும் பண்பு நலனாகும்.

இவர், திட்டை போர்டு பள்ளி, சீர்காழி **TSM** பள்ளி மற்றும் **LMC** பள்ளி என்று தொடர்ந்து தன்னுடைய கல்வியை ஒன்பதாம் வகுப்பு வரை நிறைவு செய்தார். 1954-55-ம் ஆண்டில் குடந்தையில் ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்தார். 1955-56 ஆண்டில் திருச்சி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், ஆசிரியர் பயிற்சிக் கல்வியை முடித்தார். 1956-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை சீர்காழி வாணி விலாஸ் பள்ளியில் பணி செய்தார். அன்னாரது பணியை அந்தப் பள்ளி தனது நூற்றாண்டு விழாவில் சிறப்பாகப் பாராட்டி கௌரவித்தது.

தமது கற்பனையில் தோன்றும் காட்சிகளை எழிலார்ந்த ஓவியமாகத் தீட்டுவதில் திறமையை வளர்த்துக் கொண்ட இவர், சைதாப்பேட்டை ஓவியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி சான்றிதழும் பெற்றார். பின்னர், 1962-ம் ஆண்டு சிதம்பரம் இராமகிருஷ்ணா வித்யாசாலையில் ஓவிய ஆசிரியராக சேர்ந்து சிறப்பாகப் பணியாற்றி 1993-ம் ஆண்டு பணிநிறைவு பெற்றார்.

இல்லறமென்னும் நல்லறத்தைத் தனது 28-ம் அகவையில் (15.09.1964) தனது சகோதரர்கள் திருமணம் புரிந்த ஊராகிய நாங்கூரில் திருமதி. இராஜாமணி அம்மையாரைக் கரம்பிடித்தார். "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்னும் ஔவை மூதாட்டியின் வாக்கிற்கிணங்க இருவரின் எண்ண ஓட்டங்களும், செயல்பாடுகளும் சிறப்பாக அமைந்ததனால், திருவாளர்கள், பீகர், அப்போல்லோ, நாவு என்னும் பணிவும், பரிவும், பண்பு நலனும் கொண்ட நன்மக்கட்பேறு எய்தப் பெற்றனர். மூவரும் முறையே ஸ்ரீதேவி, பூங்குழலி, விஜய புவனேசுவரி என்ற முப்பெருந்தேவியரை மணந்து, அதிசரண், அநுரதி, ஆதிகா, அபானி, அனிருத் என்னும் பேரக் குழந்தைகளும் பிறந்து விருட்சமாக இன்று அன்னாரது இல்லறம் சிறந்து விளங்குகின்றது. திரு.கபீர்தாஸ் அவர்கள் பெயரிடும் முறையே சற்று மாறுபட்ட கோணத்தில் உள்ளதை மேற்கண்ட பெயர்கள் மூலம் நாம் வியக்கலாம்.

தான் செல்லும் இடங்களில் எல்லாம் அறிந்தவற்றை குறிப்புகள் எடுத்துக் கொள்வதும், புகைப்படங்கள் எடுத்து சேகரிப்பதும் இவரின் சிறந்த பணியாகும். "புத்தகங்களால் புத்தாக்கம் பெறுவோம்" என்னும் நிலைப்பாட்டைக் கொண்டு பல அரிய நூல்களைச் சேகரித்து ஒரு சிறு நூல்நிலையத்தை தம் இல்லத்தில் அமைத்துள்ளார். தம் குடும்ப வம்சாவளிகளை 1850-ம் ஆண்டு முதல் ஏழு தலைமுறை விபரங்களைத் தொகுத்து 08.06.2009-ல் "செம்மங்குடி நடுவீடு" என்னும் நூலை வெளியிட்டதோடு வீட்டுத் தெய்வ வழிபாட்டினை முறையாக நடத்திக் காட்டினார்.

சைவசித்தாந்தக் கல்வி என்பது சற்றே கடினமான கல்வியாகும். அதனைத் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து முறையாகப் பயின்று "சித்தாந்த இரத்தினம்" என்ற பட்டம் பெற்றார். மேலும் விக்கிரசிங்கபுரம் சிவஞான சுவாமிகள் பேரவையில் சைவ சித்தாந்தத்தை குறைவறக் கற்று, தனது வாழ்நாள் சாதனையாக "சித்தாந்தத் துளிகள்" என்னும் அருமையான நூலினை 29.09.2019 அன்று வெளியிட்டார்கள். அந்த நூல் கடினமான சைவசித்தாந்தத்தை அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையாக அமைந்து தேன்துளிகளாய் இனிக்கின்றது. கார்குலக் களஞ்சியம் என்னும் நூல், மேனாள் முதன்மைப் பொறியாளர் தெய்வத்திரு. ந.குமரேசன் அவர்களால் வெளியிடப்பட்டது. அதில் கார்குலச் சான்றோர்கள் பற்றிய அருமையான தொகுப்பை வழங்கியு ள்ளார்கள். கார்காத்தார் ஒப்புரவு இதழில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சைவ சித்தாந்தம் மற்றும் பொது தலைப்புகளில் தொய்வின்றி கட்டுரைகள் வரைந்து வெளியிட்டார்கள்.

கார்குலத்தின் பண்பாட்டுக் கருவூலமாய்த் திகழ்ந்த தெய்வத்திரு. தி.கபீர்தாஸ் அவர்களின் வாழ்க்கை குறைவிலா நிறைவாய், தம் வருங்காலத் தலைமுறைக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

வாழ்க அன்னார்தம் புகழ்!

சைவசிந்தாந்த கலாநிதி, கயிலைமணி

**கு. சேதுசுப்பிரமணியன்**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15.10.1935

மறைவு
16.04.2025

*சித்தாந்த இரத்தினம்*

## திரு. தி. கபீர்தாஸ் அவர்கள்

**(ஓவிய ஆசிரியர், பணி நிறைவு)**
**ஸ்ரீ இராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி, சிதம்பரம்**

சீர்காழி வட்டம், செம்மங்குடி - நடுவீட்டைச் சேர்ந்த, சிதம்பரம், **S.R.** நகரில் வசித்து வந்த **திரு. தி. கபீர்தாஸ் அவர்கள் 16.04.2025 புதன்கிழமை** மதியம் **2.00** மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*மீளாத் துயரில் வாடும்...*

*பெயரன், பெயர்த்திகள்*
பீ. அதிசரண்
பீ. அநுரதி - இரெ. அருண்பரத்ராம்
அ. ஆதிகா, அ.அனிருத்
நா. அபானி

*மகன்கள், மருமகள்கள்*
க. பீகர் - இரா. ஸ்ரீதேவி
க. அப்போலோ - இரா. பூங்குழலி
க. நாவு - வி. விஜயபுவனேஸ்வரி

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
09.01.1943

மறைவு:
23.04.2025

## திருமதி N. சரஸ்வதி அம்மாள்

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் மா. உடையூர் கிராமம் தெய்வத்திரு. T. நடராஜன் பிள்ளை அவர்களின் துணைவியாரும், எங்களின் தாயாருமாகிய திருமதி **N. சரஸ்வதி அம்மாள்** அவர்கள் சித்திரை 10ஆம் தேதி (23.4.2025) புதன்கிழமை காலை 10 மணி அளவில் சிவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| பிள்ளைகள் | மறுபிள்ளைகள் | பேரபிள்ளைகள் |
|---|---|---|
| S. ஹேமலதா | B. சிவமணி | B. வேதபாலா, S. மோகன் தமிழ்மணி |
| N. அசோகன் | A. தேன்மொழி | A. கார்த்திக், A. செந்தில்குமார் |
| N. மோகன் | M. புனிதவள்ளி | D. பத்மபிரியா, M. பிரித்திவிராஜன் |
| R.S. மணிமேகலை | S.R. சபாபதி | S. வருண், S. வைஷ்ணவி |
| N. கணேசன் | G. சிவகாம சுந்தரி | G. கௌசல்யா, G. கவிநயா |

கொள்ளுபேரன்கள்

B.V. சாய்பிரஷாந்த், V. கலின், M.S. சாய் விஷாகன், M.S. சுகிர்தன்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
05.03.1951

மறைவு:
24.03.2025

## S. பானுமதி

மயிலாடுதுறை மாவட்டம், காளி, கிடாத்தலைமேடு திரு. M. சேதுராமன் அவர்களின் மனைவியும் எங்களது தாயாருமான திருமதி **S. பானுமதி** அவர்கள் **24.03.2025** அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்

கணவர் **M. சேதுராமன்** TNEB (Rtd.)

இதயத்தில் உன் நினைவுகளை சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும்

மகள்கள்
**S. சித்ரா**
**S. இந்துமதி**
**S. மீனாட்சி**
**S. காயத்ரி**

மருமகன்கள்
**B. சிவக்குமார்**
**R. விவேக்**
**K. திலகர்**
**K. விஸ்வந்த்**

மற்றும்

**பேரன்கள், பேத்திகள், உறவினர்கள்.**

# நினைவஞ்சலி



திருமதி. **V. வசந்தா**
தோற்றம் : 03–04–1940
மறைவு 01–05–2018

தியாகி. திரு. **V. வேலாயுதம் பிள்ளை**
தோற்றம் : 12–04–1936
மறைவு 30–05–2024

வரிச்சிக்குடி – காரைக்கால்

*ஆண்டின் நான்காம் மாதத்தில் அவதரித்து*
*ஐந்தாம் மாதத்தில் அமரத்துவம் எய்திய*
*எங்கள் பாசமிகு பெற்றோர்*

என்றும் உங்கள் நினைவில்

மகள்கள்
**V. பூங்குழலி**
**V. அருள்மணி**
**V. தேவந்தி**

மருமகன்கள்
**S. ரெத்தினம்** – முத்துசேர்வா மடம்
**B. சிவகுமார்** – கேசிங்கன்
**S. சிவபாலன்** – இலையமுது கூடம்

பெயர்த்திகள் :
திருமதி. **R. கீதாம்பரி கார்த்திகேயன்**
செல்வி. **வினோதினி சிவகுமார்**
செல்வி. **சுதாங்கினி ரெத்தினம்**
செல்வி. **யாழினி சிவபாலன்**
பேரன். **சாய்சரண் ரெத்தினம்**

பிறர் கூற கேட்ட கதைகள் பல, பலர் வாழ்க்கைப் பயணங்களில் பாதை வழிகாட்டியாக இருந்தவராக கதைகள் செவி எட்டிய தருணம் பல, இந்தப் பேத்தி சீடனாக இவரிடம் கற்ற வாழ்க்கை நடைமுறைகள் பல, மனதில் என்றும் பதிந்திருக்கும் முன்னுதாரணமே! அஃது மட்டுமே இந்த உலகை பல கோணங்களில் காணக் கற்றுக் கொடுத்தது. சிறுபிள்ளையாக இவர்களுடைய விரல் பிடித்து இப்புவிமேல் நடந்தேன், இப்பொழுது அவர்கள் அளித்த நன்னெறிகளின் முக்கியத்துவத்தை பின்பற்றி வளம் வருகிறேன், வளர்கிறேன், அவர்களுடைய கண்களின் புன்னகை என் நினைவில் வருவதற்கே!

- அன்பு பேத்தி


**கோ.காருண்யா ஸ்ரீ B.Tech**

உங்களின் அன்பால் எங்களை அரவணைத்து, பாசத்தால் எங்களை பாதுகாத்து நல்வார்த்தைகளால் பாதையை தெளிவாக்கிய எங்களது தாத்தா பாட்டிக்கு அன்பு பேத்தியின் குரல்!
தமிழ் புலவரின் பேத்தி என்னும் அந்தஸ்த்தை கொடுத்த மாமேதை தாம் .
பாசத்தை அள்ள அள்ள குறையாமல் கொடுத்த எங்கள் வீட்டின் அன்புத் தலைவி எங்கள் பாட்டி .
தாத்தாவின் அறிவை பாதியளவு கூட கற்றுக்கொள்ளவில்லை என்று எண்ணும் போது என்னுடைய குழந்தை பருவம் திரும்ப வேண்டும் என்று மனம் விரும்புகிறது

- அன்பு பேத்தி

**கோ. சௌமியா ஸ்ரீ**

# நினைவஞ்சலி



## கு.வாலம்பாள் கோ.குஞ்சிதபாதம் பிள்ளை

( மறைவு : 4-Mar-2016) (20-Jun-1930 to 25-May-2021)

**என்றென்றும் உங்கள் பசுமையான நினைவுகளுடன் உங்கள் வழியில் பயணிக்கும் முயற்சியில்**

**கு.கோவிந்தராசு MCA., MBA.,**
Sernior Technical Manager, HCLTech, Chennai
**லட்சுமி கோவிந்தராசு B.Com, MBA, D.Co-op**
Adambakkam, Chennai.

**இறை பணி**
அறங்காவலர், அருட்டிரு பிணி தீர்த்த அம்மன் கோயில்

**குடும்ப பணி**
நிறுவனர், காராளன் ஒருங்கிணைத்த பண்ணயம் - விவசாயம் மற்றும் ஏழை மக்களுக்கு வேலை வழங்குதல்

**கல்வி பணி**
நிறுவனர், Kaaraalan Data Factory - IT வேலைக்கான ஆலோசனை & Data Warehousing மென்பொருள் பயிற்சியளித்தல்.

**சமுதாய பணி**
தலைவர், கார்காத்தார் சங்கம், இளையபெருமாள்நல்லூர், EC உறுப்பினர் சென்னை கார்காத்தார் சங்கம் & நங்கநல்லூர் கார்காத்தார் சங்கம் and உறுப்பினர் YMKA சென்னை.



**மேற்கொள்ளும் அறப்பணிகள்**
**கல்வி உதவி, மருத்துவ உதவி மற்றும் அன்னதானம்**
மீன்சுருட்டி அரசு மருத்துவமனையில் ஒவ்வொரு வாரமும் 50 கர்ப்பிணிப் பெண்கள் பலன் பெறும் வகையில் அன்னதானம் வழங்கப்படுகிறது.

## கோ.கு ஐயா அறக்கட்டளை

(Reg : BKIV/3/2024)

அறங்காவலர்கள்,
**வள்ளி நடராசன் & கு.கோவிந்தராசு,**
திருவள்ளுவர் நிலையம்,
3/76, கீழ தெரு, இளையபெருமாள்நல்லூர்,
மீன்சுருட்டி வழி, அரியலூர் மாவட்டம், 612903.
**தொடர்பு : 9176038261, post2govind@gmail.com**

# இறைவனடி சேர்ந்தார்



தோற்றம் :
11–05–1948

மறைவு :
22–03–2025

# S. வசந்தா அம்மாள்

22–03–2025 சனிக்கிழமை மாலை 3.44 மணி அளவில் தெய்வத்திரு. M. சண்முகம் பிள்ளை (நிறுவனர் Kavitha Constructions) அவர்களின் மனைவியும், எனது தாயாருமாகிய திருமதி. **S. வசந்தா அம்மாள்** அவர்கள் சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நினைவில் வாழும்

மருமகள் : **Dr. S. ரீனா பாலாஜி**

பேரன்கள் : **S. வருண்**
**S. செழியன்**
**S. நீல் நிஷாந்த்**

**Dr. S. பாலாஜி**
24/20 பாபநாசம் சிவன் சாலை
(பேலஸ் ரோடு)
மைலாப்பூர்
சென்னை–600 004.
Ph : 7200158989




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**
**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

# WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th May 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

- **Experience our new centralized AC dining hall.**
- **The first hotel from the temple**
- **Direct connection between the room and dining hall, making it elder-friendly**



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**